# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
☎ 044 - 26490183
9444701953

*11/29, திருமால் நகர் விரிவாக்கம்* II,
*8-வது குறுக்குத் தெரு, பூந்தமல்லி,*
*சென்னை* – 600 056.

## 1963-ல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் தலைக்கல் பொருத்தப்பட்டது. ஆனால் இதுவரை அந்த சரீரத்தின் அவயவங்கள் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடையவில்லை. இது ராஜாவின், சாத்தானின் சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகம்.

1. நம்முடைய தேவனும் இரட்சகருமாயிருக்கிற இயேசு கிறிஸ்துவினுடைய நீதியால் என்னைப் போல அருமையான விசுவாசத்தை பெற்றவர்களுக்கு, கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக கர்த்தரால் சுவிஷேகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா எழுதுகிறதாவது: : தேவனையும் நம்முடைய கர்த்தராகிய இயேசுவையும் அறிகிற அறிவினால் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் பெருகக்கடவது.

2. பொய்யனுடைய மாயத்தினாலே வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போய், பொல்லாங்கனுக்குள் கிடக்கும் சென்னை, சூளைமேடு, **இயேசு கிறிஸ்துவின்** ஜெபவீடு பாஸ்டர். ஜான் ஐசக் அவர்களுக்காக "**காலத்தையும் அதின் செய்தியை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்**" என்ற தலைப்பில் கள்ள கபடமுள்ள, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்த, வேதப்புரட்டனாகிய ராஜா சித்திரமாக வரைந்து கொடுத்து, இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு விசுவாசிகளின் மத்தியில் இலவசமாக விநியோகம் செய்யப்பட்ட **கூர்நுனிகோபுரம்** படத்திலிருந்து இச்செய்தி தொகுப்புக்குத் தேவையான இரு படங்களை எடுத்து கீழே பிரசுரித்துள்ளேன்.







இந்த இரு சித்திரங்களோடு சம்பந்தப்பட்ட வேதப்பகுதிகளை நீங்கள் 2பேது,1:1–11 வசனங்களில் தியானிக்கலாம்.

3. தந்திரமான வார்த்தைகளால், சாதுரியமான பேச்சினால், இயேசு கிறிஸ்துவின் ஜெபவீட்டை ஜாதியின் அடிப்படையில் தனக்கு ஆதாயமாக, அடைக்கலமாக வசப்படுத்திக்கொண்ட இந்த அக்கிரமக்காரனாகிய ராஜாவின் சித்திரம் பேசுகிறதை காண்கிறோம். மேலே கண்ட இரு சித்திரங்களிலிருந்து நாம் வெளிப்படையாக கற்றுக்கொள்வதென்ன?

4. முதலாவது சித்திரத்தில், நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் லவோதிக்கேயா சபை காலத்தில், 1963–ம் ஆண்டில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பூரணப்பட்டு, தலைக்கல் அதன் மீது பொருத்தப்பட்டுள்ளதை காண்கிறோம். இதை இன்னும் சற்று விளக்கமாக எழுதப்போனால் 1963–ல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை அதாவது கிறிஸ்துவின் மணவாட்டி பூரணப்பட்டு, அவள்மேல் அவளது தலையாகிய கிறிஸ்து அதாவது தலைக்கல் பொருத்தப்பட்டு, ஆனாலும் 2006 வரை அவள் எடுத்துக்கொள்ளப்படாமல் 1963–லிருந்து காத்துக் கொண்டிருக்கிறாள். பாருங்கள், கிறிஸ்துவின் சரீரம் பூரணப்பட்டு இதுவரை 33 ஆண்டுகள் ஆகிவிட்டது. அதாவது தலைக்கல் சரீரத்தின் மீது இறங்கி, அவள் மீது அமர்ந்து 33 ஆண்டுகள் கடந்துவிட்டது. ஆனால் அவள் இன்னும் எடுத்துக்கொள்ளப்படவில்லை அவள் இன்னும் தன்னுடைய வாசஸ்தலத்துக்கு (பரலோகத்துக்கு) எடுத்துக்கொள்ளப்படாததற்கு காரணம் என்ன? அவள் இந்த பூமியில் கடந்த 33 ஆண்டுகளாக என்ன செய்து கொண்டிருக்கிறாள்? அவள் எப்பொழுது தான் எடுத்துக்கொள்ளப்படுவாள்? எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராத பாஸ்டர் ஜான் ஐசக் அவர்களும், அவரது தலையாகிய ராஜாவும் இதற்கு பதில் கொடுப்பார்களா?

5. இரண்டாவது சித்திரத்தில் ஒரு தனிப்பட்ட விசுவாசி, அதாவது கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாயுள்ள ஒருவன் இன்னும் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியில் நிறைவு பெறவில்லை. இதை இன்னும் சற்று விபரமாக எழுதப்போனால் 1963–ல் மனுஷரால் தள்ளப்பட்டதாயினும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட, விலையேறப்பெற்றதாயுமிருக்கிற ஜீவனுள்ள கல், அதாவது தலைக்கல் கூர்நுனி கோபுரத்தில் அதாவது கிறிஸ்துவின் சரீரத்தில் பொருத்தப்பட்டது. ஆனால் ஒரு தனிப்பட்ட மனுஷன், விசுவாசி, கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவமாயுள்ளவன் இன்னும் ஒரு பரிபூரணமான மனிதனின் வளர்ச்சியில் நிறைவு பெறவில்லை என இரண்டாவது சித்திரம் பேசுகிறது. இங்கு கூர் நுனிகோபுரத்தில் தலைக்கல் பொருத்தப்படவில்லை. ஒரு தனிமனிதன், விசுவாசி, கிறிஸ்துவின் சரீரத்தில் அவயவமாயுள்ளவன் பூரணப்படாமல், அவன் அவயவமாயுள்ள கிறிஸ்துவின் சரீரம், கிறிஸ்துவின் சபை எப்படி பூரணப்பட்டது? ஊழியத்தின் பாதையில் ஒருமனப்பட்டுள்ள, நீதிமன்றத்தில் கூண்டில் ஏறி சாட்சி கூற ஏறுவதிலும் ஒருமனப்பட்டுள்ள இணைப்பிரியா கூட்டாளிகள் இருவரும் இதற்கு பதில் கூறுவார்களா?

6. இப்பொழுது ராஜா மற்றும் இயேசு கிறிஸ்துவின் ஜெபவீட்டின் இந்த மாயையான, ஒன்றுக்கொன்று முரண்பட்ட போதனைகள் நம்மை அழைத்தவரால் உண்டானது அல்ல. இது பரத்திலிருந்து இறங்கி வந்த ஞானமும் அல்ல. இவர்களின் ஞானம் லௌகிக சம்பந்தமானது, பேய்தனத்துக்கடுத்தது. சகலவித கபடங்களுக்கும், வஞ்சகங்களுக்கும், பொறாமைகளுக்கும், புறங்கூறுதலுக்கும், ஆகடியம் பேசுதலுக்கும் ஊற்றாகிய ராஜாவின் மாம்சத்திற்குரிய ஞானம் ஆகும். இது அவனுடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகும். ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்த, கர்த்தரால் ஏற்படுத்தப்படாத, தன்னைத்தான் பாஸ்டராக்கிக் கொண்ட, தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கென்று ஊழியம் செய்யும் பொய் சாட்சிக்காரனாகிய பாஸ்டர். ஜான் ஐசக்கின் மாறுபாடான அந்நிய உபதேசம். இந்த உபதேசத்தை நீங்கள் குப்பைத்தொட்டியில் எறிந்து விடுவது உங்களுக்கு நலமாய் இருக்கும்.

7. ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, நயவஞ்சகன் ராஜா உங்களை தன்னுடைய லௌகிக ஞானத்தினாலும், நயவசனிப்பினாலும், மாயையான தந்திரத்தினாலும், தந்திரமான கட்டு கதைகளினாலும், கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாய் இருங்கள். இவன் மகா தந்திரசாலி, தந்திரவாதி. இவன் எப்பொழுதுமே எது சரியோ அதற்கு எதிர்த்து போராடுகிறவனாயிருக்கிறான். ஒரு கறுப்பு பறவை தன்னுடைய இறகுகளில் மயிலின் சிறகுகளை சொருகிக்கொண்டு தன்னை மயிலாக்க முயற்சி செய்கிறது. சாத்தானுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே.

8. வாலிபர்களே, தன் மாம்ச சிந்தையிலே வீணாய் இறுமாப்புக் கொண்டிருக்கிற, அவலட்சணமான சுய ஆதாயத்துக்காக சபை நடத்தும், ஜாதிவெறியை தூண்டிவரும் பாஸ்டர் ஜான் ஐசக் உங்கள் பந்தய பொருளை நீங்கள் இழந்து போகும்படி உங்களை வஞ்சியாதிருக்க பாருங்கள். ராஜா அயோக்கியன் தான், ஆனாலும் அவனுடன் ஊழியத்தில் எனக்கு பங்கு உண்டு என்று கூறும் உங்கள் பாஸ்டர் யாராக இருக்க முடியும் என்பதை நீங்களே நிதானித்துப் பாருங்கள். இருவர் ஒருமனப்பட்டாலொழிய உடன் ஒருமித்து நடக்க முடியாது என்பதை புரிந்துகொள்ளுங்கள்.

9, பிள்ளைகளே இயேசு கிறிஸ்து ஜெபவீட்டின் மாறுபாடான அந்நிய போதனைகளால் அலைப்புண்டு திரியாதிருங்கள். இந்த சபையின் புளித்தமாவுக்கு எச்சரிக்கையாயிருங்கள். கூட்டாளிகளின் வஞ்சகத்திலே இழுப்புண்டு தேவனுடைய வார்த்தையிலிருந்து, இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்து நீங்கள் விழுந்து போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். இது இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு அல்ல, மாறாக ஒரு குறிப்பிட்ட ஜாதியாரின் ஐக்கியமாக இருக்கிறது. இந்த ஐக்கியத்தில் சேர்ந்து உங்கள் ஆத்தும இரட்சிப்பை இழந்து போகாதீர்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு அர்த்தம் கொடுத்து ஏமாற்றுகிறவன் யார்? பிசாசு (மத். 4 : 6)

10. இந்த சபையில் மாப்பிளை பொண்ணுக்கு பஞ்சம் இல்லை, விளைவு அதிகம் என விளம்பரப்படுத்தியிருந்தார்கள். அதற்காக நீங்கள் போய்வர விருப்பமானால் போய் வரலாம். அதற்காகத்தான் அந்த சபை உள்ளது. இயேசு கிறிஸ்துவின் ஜெபவீடு ஒரு திருமண இணைப்பு மையமா?

11. விசுவாசிகள் புத்திசாலியான மனிதர்களாகிய பாஸ்டர்களால் பிடிக்கப்பட்டு, அடிமைத்தனத்துக் குட்படுத்தப்பட்டுள்ளதை நான் அநேக சபைகளில் காண்கிறேன். சாத்தான் தான் இதை செய்கிறான். ஆனால் தேவவசனமோ கட்டப்பட்டிருக்கவில்லை. சுயாதீனமான தேவனுடைய சரீரமாகிய சபையில் அவயவங்களாக இருக்க வேண்டிய அருமையான ஜனங்களுக்கு பிசாசு, கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து, வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசு கிறிஸ்துவின் தூதன் சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம், கிறிஸ்துவின் இராஜ்யத்திலே அவருக்கு வலது பாரிசத்தில் அப்போஸ்தலனாகிய பவுலும், இடது பாரிசத்தில் ஏழாம் சபைகால தூதனாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் உட்காருவார்கள், இனி நடக்க இருக்கும்

உயிர்த்தெழுதலில் முதற்பலனாக எழுந்திருப்பது சகோ. வில்லியம் மரியன் பிரன்காம் என உபதேசித்து பட்சிக்கிறார்கள்.

12. மேலும் கர்த்தர் உயிர்த்தெழுந்த பின் பரலோகத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, சீஷர்கள் அருகே நின்ற வெண்மையான வஸ்திரம் தரித்த இரு தூதர்கள் மோசே மற்றும் எலியா எனவும்; கர்த்தருடைய வருகையின் ஆண்டு, மாதம், வாரம், கிழமை, மணி, நிமிடம், நொடி அனைத்தும் தனக்கு துல்லியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது, ஆனாலும் அதை யாருக்கும் தெரிவிக்கக்கூடாது என கட்டளை பெற்றுள்ளேன் எனவும் நாம் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட அவருடைய மணவாட்டி, நாம் கிருபையினால் அந்த சிலாக்கியத்தை பெற்றிருக்கிறோம். ஆதலால் நாம் மாம்சத்தில் இருக்கையில், மாம்சத்தில் செய்யும் அனைத்து மீறுதல்களுக்கும், அக்கிரமங்களுக்கும், பாவங்களுக்கும் மன்னிப்பு உண்டு. தேவன் அதை ஒரு பொருட்டாக எண்ணுவது கிடையாது. கிருபை அனைத்தையும் மூடிக்கொள்கிறது. கணவன் தன் மனைவியின் தவறுகளை தானே ஏற்றுக்கொள்கிறான். அவ்விதமாக நாம் செய்யும் தவறுகளை நம்முடைய மணவாளனாகிய கிறிஸ்து கண்டு கொள்வதேயில்லை என உபதேசித்து இளம் வாலிப பெண்களையும், ஆண்களையும் தனது இச்சைக்குட்படுத்திய கையினால் பிடிக்கப்படக்கூடாததாய், எறிந்து போடப்பட வேண்டிய முள்ளுக்குச் சமானமான ராஜாவின் உபதேசத்தினாலும் பாழாய்ப்போனார்கள்.

13. நகை அணிந்திருந்தால் ஞானஸ்நானம் கொடுக்க மாட்டோம் எனவும், (இவன் கொடுக்காவிட்டால், மற்றொருவர் இருக்கிறார் என்ற தைரியம் மக்கள் மனதில் இல்லாததைக் குறித்து பரிதாபப்படுகிறேன். இது ஒரு சுயநீதி) திருமணத்தில் அடையாளச் சின்னமாக மோதிரம் மட்டும்தான் அணிய வேண்டும் தாலிக்கொடி அணியக்கூடாது என்பதும் சுயநீதியே. இவ்வாறாக நல்மனச்சாட்சியின் உடன்படிக்கைக்கு தகுந்த அடையாள சின்னத்தை அணியவிடாதபடி தடுப்பதும், சபையில் கூட்டம் அதிகமாக இருக்கிறது, கர்த்தருடைய இராப்போஜனம் சூரிய அஸ்தமனத்திற்கு பின் ஆரம்பித்தால் சபையார் தங்கள் வீடுகளுக்கு திரும்பி செல்ல முடியவில்லை. ஆதலால் இராப்போஜன பந்தியை சூரிய அஸ்தமனத்திற்கு முன்பே ஆரம்பித்து முடிக்கிறோம் போன்ற சுய கற்பனை, மனுஷனுடைய போதனை. இது வேத வாக்கியங்களுக்கு முரணானதே.

14. திருமண வேளையில் ஆண் பெண் இருவரும் அழைக்கப்பட்டவர் மத்தியில் முத்தமிட்டுக்கொள்ள வேண்டும். இது என்ன? அமெரிக்க கலாச்சாரம். லவோதிக்கேயா சபை காலத்தில் மணவாட்டி நித்திரை மயக்கத்தில் இருக்கிறாள். அவளை நித்திரை மயக்கத்திலிருந்து தட்டி எழுப்ப இன்னொரு தூதன், அது ஐந்து வகை ஊழியத்திலுள்ள ஒருவராகவும் இருக்கலாம் என்ற துர் உபதேசம். 1963–ல் தலைக்கல் வந்துவிட்டது, சபை பூரணப்பட்டு விட்டது. ஆனால் சபையில் அவயவமாக உள்ள ஒரு தனிப்பட்ட மனிதன் இன்னும் பூரணப்படவில்லை என்பது பேய்த்தனத்துக்கடுத்த உபதேசம். நாம் இப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சியில் இருந்துகொண்டு இருக்கிறோம். அதே நேரத்தில் உலகில் உள்ள பாடுகளிலும், உபத்திரவங்களிலும் பங்குள்ளவர்களாயிருக்கிறோம் என்ற மாயையான உபதேசம்.

15. ஆண்கள் தாடி, மீசை வைக்கக்கூடாது, நன்கு சிரைத்து விட வேண்டும். இது சகோ. வின்தயாள் என்பவரது உபதேசம். இதை நடைமுறையில் கொண்டு உபதேசிக்கும் பாஸ்டர் ஐசக் வசந்தக்குமாரையும், சகோ. டேனியல் ஆசீர்வாதத்தையும், இதை பின்பற்றிவரும் இவர்களது சகாக்களைக் குறித்தும் என்ன என்று சொல்வது? இது 100% வேதப்புரட்டு அல்லவா? ஒரு லோக்கல் சபையை சார்ந்த சகோதரன் மற்றொரு சபையை சார்ந்த சகோதரனுடன் கர்த்தருடைய இராப்போஜன பந்தியில் பங்குக்கொள்ளக் கூடாது, கால்களை கழுவும் சடங்கை ஆசரிக்கக்கூடாது. இது என்ன? இது ஆவிக்குரிய சகோதரர்களை பிரித்து வைக்கும் சாத்தானின் தந்திரம். இது வாலிப ஊழியர்களின் காலம், இந்நாட்களில் முதிர் வயதானவர்களுக்கு ஊழியத்தில் பங்கு இல்லை. அவர்கள் ஓய்வு பெற்றிட வேண்டும். கர்த்தர் அவர்களை எடுத்து உபயோகிப்பதில்லை. இப்படிப்பட்ட நயவஞ்சகமான உபதேசம் என்ன? இது என்ன காமராஜர் அரசியல் திட்டமா இந்த லவோதிக்கேயா சபை காலத்தில்?

16. ஐந்துவகை ஊழியத்தில் அடிக்கடி பதவி உயர்வு, தாழ்வு நமது சபைகளில் இருந்து வருகிறது. சுவிசேஷகன் பாஸ்டர் ஆகிறான். போதகர், பாஸ்டர் ஆகிறான். இவர்கள் அனைவரும் யார்? தேவசித்தத்துக்கு புறம்பாக அவருக்கென்று ஒரு ஊழியம் செய்பவர்கள். நான் ஒரு தனியார் கம்பெனியில் அல்லது அரசு உத்தியோகத்தில் பிரதிவாரம் திங்கள் முதல் சனிவரை பகல், இரவு வேலை செய்வேன், ஞாயிறு மட்டும் பாஸ்டர் ஊழியம், சுவிசேஷ ஊழியம் செய்வேன், நான் ஐந்துவகை ஊழியங்களில் ஒருவன் எனக்கூறும் இவர்கள் யார்? தன் அழைப்பை அறியாதவன். அழைப்பை அறியாதவனைச் சார்ந்த ஆடுகள் நிலை என்னவாயிருக்கும்? அவைகளின் நிலையும் அவனைப் போன்றே நிலையற்றதாக இருக்கும். எல்லாம் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான். **பிசாசு தேவனுடைய வார்த்தையில் இல்லாத, செய்தியில்லாத எதையாகிலும் உன்னிடம் கொண்டு வரும்போது உன்னிடம் தேவஞானம் இருந்தால் மட்டுமே அது தவறு என்று நிதானித்து அதை விட்டு விலகுவாய். உன்னிடம் தேவ ஞானம் இல்லாததால் தான் எது தவறான உபதேசம், எது சரியான உபதேசம் என்று உன்னால் நிதானிக்க முடியவில்லை.**

17. மேலே நான் குறிப்பிட்டது போன்ற விபரீதமான கொள்கைகளையும், கோட்பாடுகளையும் கொண்டுள்ள லோக்கல் சபைகளில் நல்ல அருமையான சகோதரர்களை சாத்தான் கட்டிவைத்திருப்பதை காணும்போது அது எனக்கு மிக்க பயமிக்க ஒன்றானதாக இருக்கிறது. இவர்கள் வேதவாக்கியங்களை தங்களுக்கு கேடுவரத்தக்கதாக புரட்டுகிறார்கள். தேவனுடைய சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகை செய்கிறார்கள். இப்படிப்பட்ட லோக்கல் சபைகளில் எனக்கு அருமையான ஜனங்கள் சிக்கிக்கொண்டு தவிக்கிறார்கள். தூண்டில் முள்ளுக்கு இரையாகிறார்கள் என்பதை காணும் போது அது மிகவும் பரிதாபமாக இருக்கிறது. ஆனால் தேவன் மந்தையிலுள்ள ஆடுகள், செம்மறி ஆடுகள் தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்திக்கே செவிகொடுக்கும். இது ஓநாயின் கண்ணியில் ஒருகாலும் விழாது. ஏனென்றால் இவைகளை தேவன் "**என் ஆடுகள்**" என்று அழைக்கிறார். **ஏன் சபைகளில் இத்தனை சடங்காசாரம், பாரம்பரியம்? தாடி, மீசை, முத்தம் போன்றவை! லவோதிக்கேயா சபையின் முடிவு காலம் மிகவும் சடங்காசாரம்**

**நிறைந்ததாயிருக்கும். நாம் வாழும் இந்த லவோதிக்கேயா சபையின் காலம் சபைகளின் காலங்களிலே மிகவும் மோசமானது.**

18. 2பேது.1:3–11 வசனங்களை நாம் இங்கு தியானிப்போம். தம்முடைய மகிமையினாலும், காருணியத்தினாலும் நம்மை அழைத்தவரை அறிகிற அறிவினாலே ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும், அவருடைய திவ்விய வல்லமையானது நமக்குத் தந்தருளினதுமன்றி, இச்சையினால் உலகத்திலுண்டான கேட்டுக்குத் தப்பி திவ்விய சுபாவத்துக்குப் பங்குள்ளவர்களாகும் பொருட்டு, மகா மேன்மையும் அருமையுமான வாக்குதத்தங்களும் அவைகளினாலே நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. இப்படியிருக்க, நீங்கள் அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய் உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள். இவைகள் உங்களுக்கு உண்டாயிருந்து பெருகினால், உங்களை நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும் கனியற்றவர்களுமாயிருக்கவொட்டாது. இவைகள் இல்லாதவன் எவனோ, அவன் முன் செய்த பாவங்களறத் தான் சுத்திகரிக்கப்பட்டதை மறந்து கண் சொருகிப்போன குருடனாயிருக்கிறான். ஆகையால், சகோதரரே உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும், உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்; இவைகளைச் செய்தால் நீங்கள் ஒருகாலும் இடறிவிழுவதில்லை. இவ்விதமாய், நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் உங்களுக்குப் பரிபூரணமாய் அளிக்கப்படும்.

19. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்துக்கு பங்குள்ளவர்களாகும் பொருட்டு நீங்கள் (அப் 2:38 விசுவாசிகள், 2பேது.1:1) அதிக ஜாக்கிரதையுள்ளவர்களாய்:
அ) உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும் அதாவது உங்கள் விசுவாசத்தோடே வல்லமையையும் கூட்டுங்கள் (இங்கு தைரியம் வல்லமையை குறிக்கிறது) Add to your faith virtue,
ஆ) தைரியத்தோடே அதாவது வல்லமையோடே ஞானத்தை கூட்டுங்கள். Add to your virtue, knowledge.
இ) ஞானத்தோடே இச்சையடக்கத்தை அதாவது தன்னடக்கத்தை கூட்டுங்கள். Add to your knowledge, temperance (Self control)
ஈ) இச்சையடக்கத்தோடே அதாவது தன்னடக்கத்தோடே பொறுமையை கூட்டுங்கள். Add to your temperance (Self control), Patience.
உ) பொறுமையோடே தேவபக்தியை கூட்டுங்கள். Add to your patience, Godliness.
ஊ) தேவபக்தியோடே சகோதரசிநேகத்தை கூட்டுங்கள். Add to your Godliness, brotherly kindness.
எ) சகோதர சிநேகத்தோடே அன்பை கூட்டி வழங்குங்கள். Add to your brotherly kindness, love.

இவ்வாறாக நீங்கள் உங்கள் வாழ்க்கையில் ஒரு சுபாவத்தோடு மற்றொரு சுபாவத்தை கூட்டி, கூட்டிக் கொண்டு அதில் பெருகுவீர்களானால் (If these things be in you, and abound) கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவிலே வீணரும், கனியற்றவர்களுமாட்டீர்கள். (You shall neither be barren nor unfruitful)

**21. ஒரு தனிப்பட்ட மனிதன்:**

அ. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை அறிகிற அறிவின் வளர்ச்சியில் ஒரு சற்குணமுள்ள கிறிஸ்தவனாக மாற
ஆ. கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய நித்திய ராஜ்யத்துக்குட்படும் பிரவேசம் அவனுக்கு பரிபூரணமாக அளிக்கப்பட (Entrance into the everlasting kingdom of Lord and Saviour Jesus Christ)
இ. ஜீவிக்கிற தேவன் வாசம் பண்ணத்தக்கதான ஜீவனுள்ள ஆலயமாக மாற. அதாவது தேவன் ஒரு சரீரத்தில் குடியிருக்க
அவன் மேற்கண்ட ஏழு சுபாவங்களையும் உடையவனாக காணப்பட வேண்டும். அதாவது தேவனுடைய வளர்ச்சிக்கு ஏழு தகுதிகள், ஏழு படிகள் (Steps). ஏழு தேவனுடைய பரிபூரணம். தேவன் ஏழில் பரிபூரணப்படுகிறார். உங்களுக்கு தெரியுமா? எண் 5 – கிருபை. எண் 8 நித்தியம்.

22. நம்முடைய சரீரம் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியடைந்து, அது தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாற நாம் மேற்கண்ட ஏழு சுபாவங்களில் பரிபூரண வளர்ச்சி அடைய வேண்டும். பால் உணர்ச்சியின் விருப்பம் காரணமாக வாழ்ந்திருந்து நம்முடைய ஜீவன் இவ்வுலகிற்கு கொண்டு வரப்பட்டது. அவருடைய பரிசுத்த ஆவி நம்மேல் அனுப்பப்பட்டதன் மூலம் நம்முடைய சுபாவங்கள் மாறுகின்றன. ஆகவே நாம் அவருடைய தெய்வீக சுபாவத்தை தரித்துக்கொண்டு தேவன் வசிக்கத்தக்க இடமாக மாறுகிறோம். இயேசு இதையே நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள் என்றார். யோ 14:20

23. நாம் கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்தில் (Divine nature) பங்குள்ளவர்களாக மாற (அ) நாம் என்ன செய்ய வேண்டும், (ஆ) அதை எப்படிச் செய்ய வேண்டும் என்ற சட்டத்தை அப்போஸ்தலனாகிய பவுல் நமக்கு இங்கே கொடுக்கிறார்.

24. கிறிஸ்துவுக்குள் எனக்கு அருமையானவர்களே, நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுள்ளதினால் கிறிஸ்துவின் மணவாட்டி, மணவாட்டி எனக்கூறி, உங்கள் காலத்தை வீணாக கழித்து ஒரு மாயையான கனியற்ற வாழ்க்கை வாழ்ந்து வரும் சகோதரனே, சகோதரியே நான் கீழே எழுதுகிறதை சற்று கவனமாக தியானியுங்கள். நீங்கள் வஞ்சிக்கப்படுகிறதை நான்

பார்த்துக்கொண்டு சும்மா இருக்க முடியாது. உங்களை குறித்து ஒரு பாரம் என் உள்ளத்தில் உண்டு. என்பதை நீங்கள் அறியாவிட்டாலும், என் இருதயத்தை ஆராய்ந்து அறிகிற தேவன் அறிவார்.

அ) நீங்கள் தேவன் ஒருவர் உண்டு என விசுவாசிக்கலாம். மாற்.12:29 நல்லது. ஆனால் இந்த விசுவாசத்தை பிசாசும் உடையவனாயிருந்து நடுங்குகிறான் (யாக்.2:19). அப்படியானால் உங்களுக்கும் பிசாசுக்கும் உள்ள வித்தியாசம் தான் என்ன? சற்று சிந்தியுங்கள்.

ஆ) நீங்கள் நான் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுள்ளேன் என்று கூறலாம் (அப்.2:38) அது உண்மைதான். ஆனால் அன்று தன்னை ஒரு பெரியவன் என்று சொல்லி சமாரியா நாட்டு மக்களை பிரமிக்கப்பண்ணி, தேவனுடைய பெரிதான சக்தி என்று சிறியோர் முதல் பெரியோர் வரை யாவரும் அந்த சீமோனுக்கு செவிகொடுத்து வந்தார்கள். சுவிசேஷகனாகிய பிலிப்பு பிரசங்கித்த சுவிசேஷத்தை அவன் விசுவாசித்து, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றான். ஆனாலும் அவன் கசப்பான பிச்சிலும், பாவக்கட்டிலும் அகப்பட்டிருந்தான். தியானியுங்கள் அப்.8:9–23 வசனங்கள். நீங்களும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுள்ளோம் என்று கூறுகிறீர்கள். ஆனாலும் உங்களுக்குள் இன்றைய நாள் வரை விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனையாகிய பொருளாசை, பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள் (உங்கள் லோக்கல் சபைகள் ஒவ்வொன்றும் மார்க்க பேதங்களில், உபதேசங்களில், போதனைகளில், விசுவாசத்தில், நம்பிக்கையில் ஒன்றுக்கொன்று பிரிந்து காணப்படுகிறதே! சென்னை சபை, கல்வாரி சபை, இயேசு கிறிஸ்துவின் ஜெப வீட்டில் நான் மேற்கூறிய காரியங்களில் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக காணப்படுகிறதை நீங்களே உங்கள் கண்களினால் காணலாம். உங்கள் மத்தியில் உள்ள இதர சபைகள், நீங்கள் சார்ந்துள்ள சபை ஒன்றுக்கொன்று முரண்பாடாக அல்லவா போதிக்கிறது. இதையும் நீங்கள் கண்கூடாக காண்கிறீர்களே கண்களுள்ளவன் காணக்கடவன்). பொறாமைகள், வெறிகள் போன்ற மாம்ச கிரியைகள் காணப்படுகிறதே! இப்படிப்பட்டவைகளை செய்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை என கலா.5:19–21 வசனங்களில் தியானிக்கிறோமே. இப்படிப்பட்ட கிரியைகள் உங்களிடத்தில் காணப்படும் போது நீங்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் எடுத்ததினால் பலன் என்ன? சீமோனுக்கும் பலன் இல்லை. அவ்விதமாக உங்களுக்கும் பலன் இல்லை அல்லவா!

இ) நீங்கள் சபை கூடுதலுக்கு நான் ஒழுங்காக செல்லுகின்றேன், சபை கூடுதலை என்றுமே விட்டு விலகியதேயில்லை எனக் கூறி மேன்மை பாராட்டுகிறீர்கள். நல்லது. சபை கூடுதலை விட்டு விடாதிருங்கள் என்று எபி.10:25 கூறுகிறது. ஆனால் அவிசுவாசிகளும், பாவனை விசுவாசிகளும் விசுவாசிகளோடே ஐக்கியப்பட்டு சபை கூடுதலில் ஒழுங்காக பங்கு கொள்ளுகிறார்களே. அவர்களும் விசுவாசிகளுடன் சபை கூடுதலை விட்டு விடாது ஒழுங்காக சபைக்கு பிரதி ஞாயிறு காலை, புதன்கிழமை மாலை மற்றும் வெள்ளி உபவாச கூட்டங்களுக்கு ஒழுங்காக வந்து செல்லுகிறார்கள் என்பதை நீங்கள் அறிவீர்களா? ஆனால் நீங்கள் யாவரும் எசே.33:30–31 வசனங்களின்படி சபையில் தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தியை சென்று கேட்போம் வாருங்கள் என்று ஒருவரோடொருவரும், சகோதரனோடே சகோதரிகளும், பிள்ளைகளோடே பெற்றோர்களும் கூறி ஜனங்கள் கூடி வருகிற வழக்கத்தின்படி தேவனுடைய சமூகத்தில் தேவனுடைய ஜனங்கள் போன்று உட்கார்ந்து வார்த்தைகளை கேட்டு அல்லேலூயா ஸ்தோத்திரம்! என கோஷம் எழுப்புகிறீர்கள். ஆனாலும் நீங்கள் தேவனுடைய வார்த்தையின்படி, இக்காலத்திற்குரிய செய்தியின்படி நடக்கிறதில்லை என வேதம் கடிந்துகொள்கிறதே.

நீ உன்னை பாஸ்டர் என அழைத்துக் கொள்கிறாய். ஆனால் உன் பெண் பிள்ளைகள் வெளியே புறம்பான அலங்கரிப்போடு செல்லுகிறார்கள். சபைக்குள்ளே எந்தவிதமான அலங்கரிப்புமின்றி பரிசுத்த ஸ்திரீகள் போன்று உட்கார்ந்திருக்கிறார்கள். இது என்ன? மாய்மாலம்தானே! நீ உன்னை மேய்ப்பன் என அழைத்துக்கொண்டு உன் பிள்ளைகளின் திருமணத்தை உன் சபை கூடிவரும் இடத்தில் நடத்தாது, பேய்களுடைய குடியிருப்பும் சகலவித அசுத்த ஆவிகளுடைய குடியிருப்புமாகிய திருமண மண்டபத்தில் நடத்துகிறாயே! உன் நடத்தைகளே நீ ஒரு கள்ள கபடமுள்ள வேலையாள் என்று சாட்சி கூறுகிறதே! நேரத்திற்கு ஏற்றார்போல் வேஷம் போடுகிறாயே! ஆக சபை கூடுதலில் பாவி, பரிசுத்தவான், விசுவாசி, அவிசுவாசி பாவனை விசுவாசி, கள்ள கபடமுள்ள வேலையாட்கள் அனைவரும் பங்கு கொள்ளத்தான் செய்கிறார்கள். காரியம் இப்படியிருக்க, அதில் உனக்கு மட்டும் மேன்மை என்ன? நீ தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் கீழ்படிந்து நடந்தால்தானே, அதினால் உனக்கு மேன்மை! ஆனால் உன் வாழ்க்கை அப்படி அல்லவே! இதை குறித்து தானே எல்லாம் மாயை மாயை என்று பிரசங்கி கூறுகிறான்.

ஈ) நீங்கள் நான் காணிக்கை மற்றும் தசமபாகம் ஒழுங்காக கொடுக்கிறேன் எனலாம். (ஆதி.14:20) ஆனால் பரிசேயனும் காணிக்கை தசமபாகம் கொடுக்கிறானே! நீங்கள் செய்யும் ஒரு காரியத்தை அவிசுவாசியும், பாவனை விசுவாசியும் செய்கிறானே! அப்படியானால் இதில் நீங்கள் மேன்மை பாராட்டுவதில் பலன் என்ன?

உ) கர்த்தர் என்னோடு அனுதினமும் இடைபடுகிறார், கர்த்தர் என்னோடு பேசுகிறார், நான் அவர் சத்தத்தை கேட்கிறேன் எனப்பெருமையாக சபையில் சாட்சி கூறலாம். ஆனால் கர்த்தர் பிலேயாமோடும் இடைப்பட்டார், பேசினார் என்பதை மறந்து விடாதீர்கள். தேவன் இருசாராரிடமும் இடைபடுகிறார், பேசுகிறார் என்பதை அறிவீர்களா? தியானியுங்கள் எண் 22, 23, 24 அதிகாரங்கள் மற்றும் 2பேது. 2:15,16 வசனங்கள். தேவன் தம்முடைய சரீரமாகிய சபையோடும், கள்ள சபையோடும் இடைபடுகிறார்.

ஊ) கர்த்தர் என்னை ஐந்துவகை ஊழியத்தில் சுவிசேஷகனாக, பாஸ்டராக போதகனாக அழைத்திருக்கிறார் என கூறலாம். எபே.4:13. ஆனால் கேட்டின் மகன் யூதாஸையும் அவர் அப்போஸ்தலனாக அழைத்தார். மத்.10:4. நீங்கள் சுவிசேஷகன், பாஸ்டர், போதகர் என்றால் உங்கள் அழைப்பு

வேதவாக்கியங்களோடு இசைந்து போகிறதா? இல்லையே! நீங்கள் இரு எஜமான்களுக்கு அல்லவா ஊழியம் செய்து ஊதியம் பெறுகிறீர்கள். உங்கள் மனைவி பொது ஸ்தலங்களில் சென்று பணிபுரிகிறார்களே. பின் நீங்கள் உங்களை எப்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஊழியக்காரன் என்று அழைக்கலாம்? உங்களை நீங்களே சீர்தூக்கிப் பாருங்கள். உங்கள் மத்தியில் உள்ள சுவிசேஷகன், பாஸ்டர், போதகன் இவர்களில் 100–க்கு 99 சதவீதத்துக்கு மேல் தேவனால் ஏற்படுத்தப்படாதவர்களே. பாஸ்டர் என்ற போர்வையின் கீழ் பலர் இந்த உலகில் ஒரு பிழைப்பு நடத்திக்கொண்டு வருகிறார்கள். தெருத்தெருவாகவும் ஊர் ஊராகவும், கிராமம் கிராமங்களாகவும், பட்டிணம் பட்டிணங்களாகவும், நகரம் நகரங்களாகவும், காடு மேடு அலைந்துக் கொண்டு திரியும் ஒரு திருமண தரகன் எப்படி பாஸ்டர் ஊழியம் செய்ய முடியும்? தேவனுடைய வார்த்தை உங்களை நியாயம் தீர்க்கிறதை (யோ 12:48) நீங்கள் அறியாதிருக்கிறதென்ன?

எ) கர்த்தர் என்னை ஆவிக்குரிய ஆசீர்வாதங்களினால் நிறைத்திருக்கிறார் என நீங்கள் மேன்மை பாராட்டலாம். அந்நாட்களில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே, கர்த்தாவே, உமது நாமத்தினாலே தீர்க்க தரிசனம் உரைத்தோம், பிசாசுகளை துரத்தினோம். அநேக அற்புதங்களை செய்தோம் என்பார்கள். ஆனால் கர்த்தரோ நான் உங்களை ஒருக்காலும் அறியேன். அக்கிரம செய்கைக்காரர்களே என்னைவிட்டு அகன்று போங்கள் என்பார். தியானியுங்கள் மத்.7:22–23. அப்படியானால் உங்கள் மேன்மை பாராட்டுதல் எங்கே? உன்னிடம் காணப்படும் ஒரு வரம் நீ ஆவிக்குரியவன் என்பதை உறுதிப்படுத்தாது.

ஏ) நான் இக்காலத்திற்குரிய செய்தியில் நூற்றுக்கணக்கான பிரசங்கங்களை படித்திருக்கிறேன் எனக் கூறி நீங்கள் மேன்மை பாராட்டுகிறீர்கள். மற்றவர்களை விட நான் அதிகமான பிரசங்கங்களை பிரசங்கித்திருக்கிறேன் எனக் கூறி உங்களை புகழ்ந்து கொள்ளலாம், மற்றவர்களால் புகழவும் படலாம். ஆனால் பிசாசு கூட வேதவாக்கியங்களை நன்கு அறிந்தவனாய் **இப்படியும் எழுதி இருக்கிறதே** என வேத வாக்கியங்களை எடுத்து உபதேசித்தான். லூக்.4:11. நீங்கள் அறிந்திருக்கிற பிரகாரமாக சாத்தானும் வேத வாக்கியங்களை அறிந்திருக்கிறானே! இப்படி இருக்க உங்கள் மேன்மை பாராட்டுதல் எங்கே?

ஐ) சாமுவேல் தங்கமணி பாஸ்டரை போன்று அடிக்கடி தனது உபதேசங்களை மாற்றி மாற்றி சபையை பாழாக்கும் நபர்களும் உங்கள் மத்தியில் உண்டே. ஒரு இடத்தில் கர்த்தருடைய வருகை வந்துவிட்டது எனவும் மற்றொரிடத்தில் கர்த்தருடைய வருகை வரவில்லை எனவும் சகோ. பிரன்காம் கூறுகிறார் என சகோ. பிரன்காம் மீது பழியைப்போட்டு, சபையாரே உங்கள் விசுவாசத்தை கர்த்தர் வந்து விட்டார் என்பதன் மேலும், வரவில்லை என்பதன் மேலும் வைக்கலாம். நான் என் விசுவாசத்தை வந்து விட்டார் என்பதன் மேல் வைத்துள்ளேன் என்கிறாரே (சகோ.அந்தோணி ஜோசப் இதை என்னிடம் கூறினார்). இவரையும் நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள் மோசம் போகிறார்களே என்பதை அறிந்து அந்த ஜனங்களுக்காக பரிதாபப்படுகிறேன். இவரை விட்டு அவர்கள் தங்களை வேறு பிரித்துக்கொள்ள ஜெபிக்கிறேன். இவரைப் போன்று நாளுக்கு நாள் தங்கள் உபதேசங்களை பச்சோந்தி போன்று மாற்றிக்கொண்டே செல்லுகிற பாஸ்டர் பேர்வழிகள் நம் மத்தியில் நிறைய உண்டு. ஆனால் ஜனங்கள் அவர்களை பாஸ்டர் என அங்கீகரித்து அவர்கள் பின் செல்கிறார்களே என அறிந்து துக்கப்படுகிறேன். ஆனாலும் இது கொடிய வஞ்சிப்பின் காலமாக இருக்கிறது. அநேகர் வஞ்சிக்கப்படத் தான் வேண்டும்.

25. நீங்கள் உதாரணத்துக்காக நான் மேலே எடுத்துக்காட்டிய காரியங்களில் உங்களை புகழ்ந்துக் கொள்வது போன்று சாத்தானும் தன்னை புகழ்ந்துக் கொள்கிறான். அப்படியானால் உங்களுக்கும் அவனுக்கும் உள்ள வித்தியாசம் என்ன? இது சிந்தித்து செயல்பட வேண்டிய காலம்.

26. நான் மேற்கண்ட காரியங்கள் ஒருவனுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு தேவை இல்லை எனக்கூறவில்லை. அவைகள் 100–க்கு 100 சதவீதம் தேவைதான். ஆனால் நீங்கள் மேலே வாசித்த இயேசு கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்தில் பரிபூரணபடாவிட்டால் உங்களுடைய மேற்கூறிய காரியங்களினால் பிரயோஜனம் ஒன்றும் இல்லை. நீங்கள் அதிலும், இதிலும் நிறைவு உள்ளவர்களாக காணப்படவேண்டும். என்னுடைய விசுவாசத்தை நான் வேறு எதிலும் வைக்க மாட்டேன். அதை நான் ஒரு சபையின் மீதே வைப்பேன் என்றால் எந்த சபையின் மீது நான் அதை வைக்க கூடும்? அவர்கள் எல்லாரும் தேவனுடைய வார்த்தைக்கு, இக்காலத்திற்குரிய செய்திக்கு தங்கள் தங்கள் வியாக்கியானங்களை கொடுத்து மக்களை தேவனுடைய வார்த்தையை விட்டும், இக்காலத்திற்குரிய செய்தியை விட்டும் விலகச் செய்கிறார்களே! தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தி நமது அஸ்திபாரமாக இருக்கட்டும். நீங்கள் மறுபடியும் பிறக்காதவரை அதை உங்கள் அஸ்திபாரமாக்கிக் கொள்ள முடியாது.

27. கிறிஸ்துவின் மணவாட்டிக்குரிய ஸ்தானத்தில் நீ உன்னை ஏற்படுத்திக்கொள்ள; ஒரே தேவன் உண்டு என்ற உன்னுடைய விசுவாசம் மட்டும் போதாது, நீ கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றிருந்தால். அது மட்டும் போதாது, நீ சபை கூடுதலுக்கு ஒழுங்காக பிரதி ஞாயிறு, புதன், வெள்ளி சென்று வருவது போதாது. நீ உன்னை புறம்பாக அலங்கரிக்காமல் இருப்பது மட்டும் தகுதியாகது. நீ காணிக்கை தசமபாகம் ஒழுங்காக கொடுப்பது ஒரு பொருட்டல்ல. தேவன் உன்னோடு அனுதினமும் இடைபடலாம், ஆனால் அது ஒரு தகுதியாக இராது, தேவன் உன் மூலமாக அற்புத அடையாளங்களை நடப்பிக்கலாம். அது ஒரு காரணமாகாது, நீ உன்னை அப்போஸ்தலனாக, தீர்க்கதரிசியாக, சுவிசேஷகனாக, மேய்ப்பனாக, போதகனாக அழைத்துக்கொள்ளலாம். அந்த மேன்மைகள் ஒரு தகுதியாகாது, நீ இக்காலத்திற்குரிய சபைகால தூதனின் செய்திகள் 1200–ஐயும் கரைத்து குடித்திருக்கலாம், அதெல்லாம் அதற்கு தகுதி கிடையாது. மாறாக மேலே குறிப்பிடப்பட்ட காரியங்களோடு நீ தலைக்கல்லாகிய அன்பு என்னும் கூர்நுனி கோபுரத்தில் காணப்படும் கிறிஸ்துவின் ஏழு திவ்விய சுபாவத்தை அதாவது, விசுவாசம், வல்லமை, ஞானம், தன்னடக்கம், பொறுமை, தேவபக்தி, சகோதரசிநேகம் ஆகியவற்றையும் நீ பரிபூரணமாக, முழுமையாக எந்தவித குறைவுமின்றி அனைத்தையும் பெற்றிருக்கவேண்டும். அதுதான் உன்னை மணவாட்டிக்கு தகுதிப்படுத்தும். அதுதான் உன்னை கிறிஸ்துவின் சரீரத்தில் ஒரு அவயவமாகச் சேர்க்கும். அப்பொழுது தான் உன் சரீரம் தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாறும். அப்பொழுது தான் அன்பாகிய

தலைக்கல் உன்மேல் அமரும், உன்னோடு இணையும். அப்பொழுது சரீரமும் தலையும் இணைக்கப்பட்டு நீ கிறிஸ்துவின் மணவாட்டியாய் எடுத்துக்கொள்ளப்படுவாய். நீ கிறிஸ்துவின் சரீரத்திற்குள் இருந்தால் மட்டுமே இயேசு மரித்தோரிடமிருந்து எழுந்தது எவ்வளவு நிச்சயமோ அவ்வளவு நிச்சயமாய் நீயும் எழுந்திருப்பாய். இயேசு எடுத்துக் கொள்ளப்பட்டது போல நீயும் எடுத்துக்கொள்ளப்படுவாய்.

28. மேற்கூறிய கிறிஸ்துவின் திவ்விய ஏழு சுபாவங்கள் ஒன்றும் குறைவில்லாமல் உன்னில் காணப்படும் வேளைவரை, நீ உன்னை கிறிஸ்துவின் மணவாட்டி, மணவாட்டி என அழைத்துக்கொண்டு மோசம் போகாதே! இது கொடிதான வஞ்சிப்பின் காலம் ஆதலால் நீ சார்ந்து இருக்கும் இந்த உலக பிரகாரமான சபைகளை விட்டு வெளியே வா, உன் ஐக்கியத்தை உனது பாஸ்டரோடு அல்ல, உன்னை சார்ந்திருக்கும் மக்களோடு அல்ல, மாறாக பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் வைத்து, அதை காத்துக்கொள்.

29. கடந்த 28 ஆண்டுகளாக தேவனுடைய சபைக்கு கள்ளகபடமுள்ள வேலையாட்களை சுட்டிக்காட்டி, கள்ள உபதேசங்களை, மாறுபாடான போதனைகளை எதிர்த்து, கள்ளசபைகளை அடையாளம் காட்டி தேவனுடைய சபையை சத்தியத்துக்குள் வழி நடத்த முயற்சித்து வருகிறேன். இதனால் எங்கும் பகை. சத்தியத்தை எழுதுவதினால், சொல்லுவதினால் சத்துரு ஆனேன். இதனால் என்னையும், என் குடும்பத்தினரையும் கொச்சையான வார்த்தைகளினால் விமர்சித்து எழுதும் அரைகுறை விசுவாசிகள் உண்டு. பேலியாளின் மக்களும் உண்டு. இந்நாட்களில் புதிதாக கலிஸ்த்ராஜ் என்பவன் எழும்பியுள்ளான். இவனையும் நான் ஏற்ற வேளையில் சந்திக்க வேண்டியதிருக்கிறது. இவைகள் எல்லாவற்றையும் பார்த்துக்கொண்டு பொறுமையாகவே இருந்து வருகிறேன். நான் பல நிந்தை, அவமானங்களின் மத்தியில் ஜனங்களை எச்சரித்தாலும் அவர்கள் திருந்துகிறார்களா என்றால் இல்லை. ஜனங்கள் கள்ளகபடமுள்ள வேலையாட்களை அடையாளம் கண்டு கொண்டு, அவர்களை விட்டு தங்களை வேறு பிரித்துக் கொள்வதும் இல்லை. கள்ளசபைகளை விட்டு வெளியே வருவதும் இல்லை. அதோடு ஒட்டிக் கொண்டேயிருக்கிறார்கள். ஏனென்றால் அவர்களுக்கு அவர்கள் சார்ந்திருக்கும் சபை அவர்கள் கொல்லைபுறம் அருகில் இருக்க வேண்டும். பாஸ்டர் எதையும் போதித்துவிட்டு போகிறார், சபை எங்கள் வீட்டு வாசல்படி அருகில் இருக்கிறது, அதுபோதும் என்ற எண்ணத்துடன் தங்கள் ஆத்துமாவை பாழாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இவ்வாறாக இந்த ஜனங்களை எவ்வளவுதான் எச்சரித்தாலும், அவர்களுடைய நடத்தையில் மாற்றம் இல்லை. ஆனாலும் பொறுமை உள்ளவனாக காத்திருக்கிறேன். சத்தியத்திற்கு செவிக்கொடுப்பவர்களை காண்பது அரிதாயிருக்கிறது.

30. இப்பொழுது மேற்கூறிய ஏழு சுபாவங்களையும் ஒன்றோடொன்றை கூட்டி கட்ட நீ முதலில் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்து மறுபிறப்பு அடைய வேண்டும் யோ.3:5, ரோ.6அதி. நீ முழுவதுமாக மாற வேண்டும். நீ மறுபிறப்பு அடைந்த பின்பு தான் இந்த சுபாவங்களை உன்னோடு ஒன்றன்பின் ஒன்றாக சேர்க்க முடியும். நீங்கள் மறுபிறப்பு அடைந்தபின் உங்களோடு எதையும் ஒன்றன் பின் ஒன்றாக கூட்ட முயற்சிக்கவேண்டிய அவசியமில்லை. அவைகள் தானாகவே உங்களோடு ஒன்றன்பின் ஒன்றாக சேர்க்கப்பட்டு விடும். ஒரு செம்மறி ஆடு கம்பளியை உற்பத்தி செய்வதில்லை. ஏனெனில் அது செம்மறி ஆடாக இருப்பதினால் கம்பளியை உற்பத்தி செய்வது அதனுடைய சுபாவமாயிருக்கிறது. ஆக நீ மறுபிறப்பு அடைந்ததால் கிறிஸ்துவின் ஏழு திவ்விய சுபாவங்களை உற்பத்தி செய்ய, முயற்சி செய்ய வேண்டிய தேவை இல்லை. அதை உற்பத்தி செய்வது உங்கள் சுபாவமாயிருக்கும்.

31. ஒரு பரிபூரண மனிதனின் கட்டிடத்திற்கு விசுவாசம் என்பது அஸ்திபாரமாக உள்ளது. இதன் மேல் வல்லமையும், ஞானமும், தன்னடக்கமும், பொறுமையும் தேவபக்தியும், சகோதர சிநேகமும் ஒன்றன் பின் ஒன்றாக கூட்டி கட்டப்பட வேண்டியதாயிருக்கிறது. இவை அன்பு என்னும் தலைக்கல்லுக்காக காத்துக் கொண்டிருக்கிறது. அந்த அன்பு தேவனாயிருக்கிறது. முதலாவதாக நீ நிச்சயமாக மறுபடியும் பிறக்க வேண்டும். அவ்வாறாக நீ மறுபடியும் பிறக்கும்போது, நீ விசுவாசத்தை உடையவனாய் வார்த்தையை விசுவாசிக்கிறவனாய் நீ மறுபடியும் பிறந்தே ஆக வேண்டும். ஆனால் நீ மறுபடியும் பிறக்கும்போது அது விசுவாசத்தை அங்கு உற்பத்தி செய்கின்றது.

32. நீ வீட்டைக் கட்ட அஸ்திபாரத்தை மட்டுமே போட்டிருக்கிறாய். இனி நீ அந்த வீட்டை கட்ட வேண்டும். ஒரு வீட்டிற்கு முதலில் தேவையானது அஸ்திபாரம். கிறிஸ்துவின் அஸ்திபாரம் என்ன? தேவனுடைய வார்த்தையை விசுவாசிப்பதே அந்த அஸ்திபாரம், அதன்பின் நீ வளர ஆரம்பிக்கிறாய். இந்த அஸ்திபாரத்தைக் கொண்டு நீ மற்ற சுபாவங்களை இதனோடு கூட்டிச் சேர்க்க ஆரம்பிக்கிறாய். நீ உண்மையான மறுபிறப்படைந்தவனாக மாறும் போது இவைகளை நீ உன்னோடு கூட்டுவதில்லை. ஆனால் அவைகளே உன்னோடு சுபாவங்களாக கூட்டப்பட்டு பரிபூரணத்துக்கு வழி நடத்தும். ஆனால் நீங்களோ அநேக உலக காரியங்களை மனதில் கொண்டவர்களாய் இருக்கிறீர்கள். ஆதலால் நீங்கள் விழுகிறீர்கள். சில காரியங்களில், இருந்து நழுவி விடுகிறீர்கள். உங்களைப் போன்றவர்களைக் கொண்டு தேவன் தம்முடைய சபையை கட்ட முடியாது.

33. **மறுபிறப்பு என்பது என்ன?** தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளுதல் ஆகும். எபே.4:23,24. இப்பொழுது பழையவைகள் ஒழிந்து போயின, எல்லாம் புதிதாயின. ஏனென்றால் அவன் கிறிஸ்துவுக்குள் இருப்பதால் புது சிருஷ்டியாய் இருக்கிறான். (New creature) 2கொரி.5:17. இப்பொழுது உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடன் தேவனுக்குள் மறைந்திருக்கிறது. ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடே கூட மகிமையில் வெளிப்படுவீர்கள். கொலோ.3:3,4. இப்பொழுது உங்கள் மாம்சத்தின் கிரியைகள் யாவும் செத்தது. கிறிஸ்துவினுடையவர்களாகிய நீங்கள் மாம்சத்தையும் அதன் ஆசை இச்சைகளையும் சிலுவையில் அறைந்துவிட்டீர்கள். இப்பொழுது ஆவியினாலே பிழைத்து இருக்கிறீர்கள்.

34. நீங்கள் மாம்சத்தின் கிரியைகளாகிய 1. விபச்சாரம், 2. வேசித்தனம், 3. அசுத்தம் 4. காமவிகாரம், 5. விக்கிரகாராதனை, 6. பில்லி சூனியம் 7. பகைகள், 8. கோபங்கள், 9. வைராக்கியங்கள்.

10. விரோதங்கள் 11. சண்டைகள், 12. பிரிவினைகள், 13. மார்க்க பேதங்கள், 14. பொறாமைகள், 15. கொலைகள், 16. வெறிகள், 17. களியாட்டங்கள் முதலியனவைகளுக்கு மரித்தீர்கள். இப்பொழுது உங்களை ஆவியின் கனிகளாகிய 1. அன்பு, 2. சந்தோஷம், 3. சமாதானம், 4. நீடிய பொறுமை, 5. தயவு, 6. நற்குணம், 7. விசுவாசம், 8. சாந்தம், 9. இச்சையடக்கம் ஆட்கொண்டு விட்டது. ஆக பழையவைகள் ஒழிந்தன. எல்லாம் புதிதாயின. புதிய மனுஷனாக பிறந்தீர்கள். ஆம் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொண்டீர்கள் (ஆதி.1:27)

35. ஆக கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்தில் பங்குகொள்ள நீங்கள் மறுபிறப்பு அடைந்து தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ள வேண்டும். மறுபிறப்பு அடையாமல் தேவனுடைய சாயலாக சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனை தரித்துக்கொள்ளாமல், நீங்கள் கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்தில் பங்குகொள்ள முடியாது. ஆக **கிறிஸ்துவின் சுபாவத்தில் நீங்கள் பங்கடைய முதலில் மறுபிறப்பு அடைய வேண்டும்.**

36. ஆக நாம் மேற்கண்ட ஏழு சுபாவங்கள் நம்மை கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக மாற்றுகிறது. தேவனுடைய திவ்விய சுபாவத்தில் பங்கு அடையும்போது. நாம் தேவனை அறிகிற அறிவில் பரிபூரண வளர்ச்சியை அடையுகிறோம். நாம் ஒன்றை அறியாமல் அதில் பரிபூரணம் அடைய முடியாது. நாம் விசுவாசமே என்ன என்று அறியாத நிலையில், அதில் எப்படி பரிபூரணம் அடைய முடியும்? நாம் சகோதர சிநேகம் என்பது என்ன என்று அறியாத நிலையில் அதில் எப்படி பரிபூரணம் அடைய முடியும்? ஆக ஒன்றில் பரிபூரணம் அடைய முதலில் அது என்னவென்று அறிந்திருக்க வேண்டும். ஆக ஒன்றை அறியாமல் நாம் அதில் பரிபூரணம் அடைய முடியாது.

37. அடுத்து நீங்கள் **ஒவ்வொரு சுபாவத்தையும் ஒன்றன்பின் ஒன்றாக, ஒன்று** பரிபூரணம் **அடைந்தபின் அடுத்ததை கூட்டி பெற்றுக்கொண்டே வளர வேண்டும். ஒன்றில் பூரணப்படும் வரை மற்றொன்றை ஆரம்பிக்க முடியாது.** விசுவாசத்தில் பூரணப்படாத நிலையில் வல்லமையை கூட்டி கட்ட முடியாது. நீங்கள் விசுவாசத்தில் பூரணப்பட்டால் தான் அதன்மேல் வல்லமையை கூட்டி கட்ட முடியும். நீங்கள் விசுவாசத்தில் பூரணப்பட்டு வல்லமையிலும் பூரணப்பட்ட பின்புதான், அதன்மேல் ஞானத்தை கூட்டி கட்ட முடியும். ஒன்று பூரணப்படாமல் அதன்மீது மற்றொன்றை கட்ட முடியாது. நீ விசுவாசமில்லாமல் வல்லமையை அதன்மீது கட்ட முயற்சித்தால் அது உன்னுடைய விசுவாசத்தையே குலைத்துப்போடும். ஒவ்வொரு சுபாவமும், சுத்தமான கலப்படமற்றதாய் இருக்க வேண்டும். ஆதலால் இந்த கிறிஸ்துவின் திவ்விய ஏழு சுபாவங்கள் ஒன்றன்பின் ஒன்றாக, ஒன்று பூரணப்படும் வரை மற்றொன்றை ஆரம்பிக்க முடியாது. தேவகுமாரனின் பரிபூரண வளர்ச்சியின் நிலையை அடைய நீங்கள் ஒவ்வொரு சுபாவத்தையும் அது பூரணபடும்வரை காத்திருந்து பின் அடுத்ததை பெற்றுக்கொண்டே வளர வேண்டும். நன்றாக கவனியுங்கள் **ஒன்று பூரணப்படும் வரை நீங்கள் மற்றொன்றை ஆரம்பிக்க முடியாது.**

38. உதாரணமாக கட்டிடம் கட்டுமானத்தில் படிப்படியாக ஒன்றின் பின் ஒன்றாக கூட்டி கட்டி கொண்டிருக்க வேண்டும். ஒரே நேரத்தில் கட்டிடம் முழுவதையும் கட்டி முடிக்க முடியாது. முதலில் அஸ்திபாரத்திற்காக பூமியை தோண்டுகிறோம். தோண்டிய பூமியை சில நாட்கள் ஆறப்போடுகிறோம். பின் கற்களைக் கொண்டு அஸ்திபாரம் போடுகிறோம். சாந்தினால் கற்கள் ஒன்றோடொன்று இறுகும் வரை அதன்மீது நாம் எதையும் கட்டுவதில்லை. கற்களால் போடப்பட்ட அஸ்திபாரம் நன்கு இறுகிய பின்புதான் செங்கற் சுவர்களை கட்ட ஆரம்பிக்கிறோம். சுவர் கொஞ்சம் உயரம் வளர்ந்த பின் அது நன்றாக இறுக அப்படியே சில நாட்கள் விட்டு விடுகிறோம். முதலில் கட்டப்பட்ட சுவர் நன்கு இறுகிய பின்புதான் மேற்கொண்டு கட்ட ஆரம்பிக்கிறோம். இவ்வாறாக ஒன்று நன்றாக இறுகி உறுதிபடுத்தப்பட்ட பின்புதான் ஒன்றன்மேல் ஒன்றை கட்டி, முழு கட்டிடத்தையும் கட்டி முடிக்கிறோம். கட்டிடத்தை பல நிலைகளில் ஒன்றன்பின் ஒன்றாக கூட்டி கட்டி முடிக்கிறோம். அவ்வாறாகவே இந்த ஏழு சுபாவங்களில் ஒன்று பூரணப்படாமல் மற்றொன்றை அதன்மீது கூட்டி கட்ட முடியாது. ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைவதற்கு நீ இந்த ஏழு நிலைகளையும் கடந்து வரவேண்டும். இந்த ஏழு நிலைகளைக் கொண்டு ஒரு தனிப்பட்ட மனிதனை பக்குவப்படுத்துவது போன்று தம்முடைய சபையை கிறிஸ்து பக்குவப்படுத்துகிறார்.

39. **இப்பொழுது இந்த ஏழு சுபாவங்களில் ஒரு சில சுபாவங்களை மட்டும் நீங்கள் பெற்றிருக்கிறேன் என கூறலாம். உதாரணமாக உங்களிடத்தில் விசுவாசம், வல்லமை, ஞானம் போன்ற சுபாவங்கள் உண்டு எனக் கூறலாம். ஆனால் அது போதாது. இந்த மூன்று சுபாவங்களை கொண்டு நீங்கள் கிறிஸ்துவின் திவ்விய சுபாவத்தில் பங்குள்ளவர்களாக முடியாது. மேற்கூறிய ஏழு சுபாவங்கள் அனைத்தும் உங்களிடம் காணப்பட வேண்டும்.** இதை, இதை நான் பெற்றிருக்கிறேன், ஆனால் ஒன்றை மாத்திரம் பெறவில்லை என்று நீங்கள் கூறுவீர்களாயின், அங்குதான் அது உடைகிறதாயிருக்கிறது. நீங்கள் ஒன்றை பெற்று மற்றொன்றை பெறாவிட்டால் அது உடைந்துவிடும். ஒன்றை அடையாமல் மற்றொன்றை நீ பெற்றுக்கொள்ள முடியாது. அதுதான் காரியம். நீ விசுவாசத்தை பெறாமல் வல்லமையை பெற முடியாது. விசுவாசத்தையும் வல்லமையும் பெறாமல் ஞானத்தை பெற முடியாது. **ஏழு சுபாவங்களையும் ஒன்றன்பின் ஒன்றாக அதனதன் வரிசையின்படி கூட்டிச் சேர்த்து கட்ட வேண்டும்.** விசுவாசம் ஒருவனுக்கு இருக்கிற காரணத்தால் மகிமை, சத்தமிடுதல், மற்றும் அதே போன்ற காரியங்களை உடையவனாயிருக்கிறான். ஆனால் இதர சுபாவங்களை அவன் அத்துடன் உடையவனாயிராமற் போனால் தேவன் அவனை அந்த பரிபூரண வளர்ச்சிக்கு கட்ட முடியாது.

40. இந்த ஒவ்வொரு கல்லுக்கும் அதாவது ஒவ்வொரு சுபாவத்துக்கும் இடையில் பரிசுத்த ஆவி அசைவாடி அவைகள் யாவற்றிற்கும் மேலாக இருந்து, ஒன்றோடொன்று இசைவாக இருக்கும்படி இணைத்துக் கட்டுகிறது. அதாவது விசுவாசத்துக்கும் வல்லமைக்கும் இடையில் பரிசுத்த ஆவி அசைவாடி இரண்டையும் இணைத்துக் கட்டுகிறது. அதாவது **பரிசுத்த ஆவியினால் சாந்து பூசப்பட்டு இரு சுபாவங்களும் ஒன்றாக இணைக்கப்படுகின்றன. அதுபோன்று விசுவாசம், வல்லமை மீது பரிசுத்த ஆவி அசைவாடி ஞானத்தோடு இணைத்துக் கட்டுகிறது. தலைக்கல்லானது** ஒரு பரிபூரண சபையின் மேல் வந்து அமரத்தக்கதாக பரிசுத்த

**ஆவி ஒவ்வொரு சுபாவத்தையும் ஒன்றோடொன்று கூட்டி கட்டுகிறது.** கூர்நுனி கோபுரத்தில் ஒவ்வொரு கல்லுக்கும் இடையில் ஒரு சேவிங் பிளேட் கூட சொருக முடியாத அளவிற்கு இறுக்கமாக உள்ளது.

**41.** இப்பொழுது கவனியுங்கள் தலைக்கல் விசுவாசத்தில் பொருந்தாது. அது இரண்டாம், மூன்றாம் அஸ்திபாரத்திலும் பொருந்தாது. அது ஏழாவது அஸ்திபாரமாகிய சகோதர சிநேகத்தில் மட்டுமே பொருந்தும். அப்பொழுது கட்டிடம் முழுவதும் விசுவாசம் தொடங்கி சகோதரசிநேகம் வரை முழுவதும் அந்த தலைக்கல்லுடன் பொருந்துகிறதாக இருக்கும். இது குறித்து கே.ப.291 பத்தி 120–ல் கீழ்கண்டவாறு வாசிக்கலாம். இப்பொழுது அந்த கல் கீழே உள்ள அஸ்திபாரத்தில் பொருந்தாது. அது இரண்டாம் அஸ்திபாரம் அல்லது மூன்றாம் அஸ்திபாரத்தில் பொருந்தாது. அது மேலே உள்ள அஸ்திபாரத்தில் மட்டுமே சரியாக பொருந்தும். அப்பொழுது கட்டிடம் முழுவதுமே அந்த கல்லுடன் பொருந்தினதாய் இருக்கும். சபையானது விசுவாசிகளின் சரீரமும், இயேசு ஒரு காலத்தில் விட்டுச் சென்ற அந்த ஊழியம் மறுபடியும் வருகிற வரையிலும் அவர் வரமுடியாது.

**42.** தலைக்கல் கூர்நுனி கோபுரத்தின் மேல் ஒருபோதும் வைக்கப்படவில்லை ஏன்? தலைக்கல்லானது புறக்கணிக்கப்பட்டது. மத்.21:42, சங்.118:22,23, அப்.4:11, 1பேது.2:7 தலைக்கல் கிறிஸ்து. தலைக்கல் என்றாவது ஒரு நாள் வருகிறதாயிருக்கிறது. கட்டிடம் அன்பு என்னும் அந்த தலைக்கல்லுக்காக காத்திருக்கிறது **(ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி,** பத்தி 327, 328) **தலைக்கல் பரிபூரணமான சபையின் மேல் தான் வந்து அமரும். (ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி,** பத்தி 329) இக்காலத்திற்குரிய செய்தியானது இவ்வாறாக காணப்படுகிறது. அதற்கு விரோதமாக சபை பரிபூரணப் பட்டு, தலைக்கல் 1963–ல் வந்துவிட்டது. ஆனால் ஓர் தனிப்பட்ட மனிதன் பரிபூரண வளர்ச்சி அடையவில்லை என்பது பிசாசாகிய ராஜாவின் உபதேசம். நாம் தான் சபை. சபை வேறு, நாம்வேறு அல்ல. சபை பரிபூரணம் அடைந்துவிட்டது என்றால் சபையில் அவயவமாயுள்ள ஒரு தனிப்பட்ட மனிதன் பரிபூரண வளர்ச்சி அடைந்து விட்டான் என்றே பொருள். கூர்நுனி கோபுரத்தின் செய்தி உங்களுக்கு ஞாபகம் இருக்கின்றதா? அது தலைக்கல். அது என்ன செய்தது? பரிசுத்த ஆவியானவர் தனிப்பட்ட நபரின் மேல் பொருத்தப்பட்டு, அதை முத்தரித்தல். எப்பொழுது? நாம் விசுவாசம் என்பதுடன்..... அவ்விதமாக தான் அவர் ஒரு தனிப்பட்ட நபரை உருவாக்கி அவனை பொருத்தி, பரிசுத்த ஆவியினால் அவனை முத்தரிக்கிறார் **(ஐயா, இது தான் முடிவின் அடையாளமா?** பத்தி 378)

**43.** தலைக்கல் வரும்போது, அப்போது என்ன நடந்தது? தலைக்கல் வரும்பொழுது, புறஜாதிகளின் காலம் முடிவடைந்ததினால், சபையானது எடுத்துக்கொள்ளப்படுதலில் மகிமையிலே உன்னதத்திற்குச் சென்று விட்டது. தேவன் புறஜாதி காலத்தை முடிவடையச் செய்கிறார் **(தானியேலின் எழுபது வாரங்கள்** பக்கம் 195, பத்தி 137) உண்மையான சபை ஆவியின் நிறைவும், வார்த்தையும் கொண்டதாய், இயேசு செய்த வல்லமையான கிரியைகளையே தானும் செய்யும். இவ்விதம் அது வளர்ந்து கொண்டே வந்து உச்ச நிலையை அடைந்து, வார்த்தையை ஏற்றுக்கொண்ட காரணத்தால் அவரைப்போல் ஆகும்போது, இயேசு வந்து மணவாட்டியை அழைத்துக்கொண்டு போய் அவரோடு ஒன்றுபடுவாள். **(ஏ.ச.கா.வி.** பக்கம் 499, கடைசி பத்தி) ஆக தலைக்கல் 1963–ல் வந்து விட்டது என்பது எவ்வளவு பெரிய வஞ்சக உபதேசம் என்பதை காண்கிறீர்களா?

**44.** இன்று மணவாட்டி, மணவாட்டி என்று கூறுகிறவர்கள் விசுவாசத்திலாவது பூரணப்பட்டிருப்பார்களா என்பது சந்தேகமே. உங்கள்நிலை இப்படி இருக்க, நீங்கள் மணவாட்டி, மணவாட்டி எனக்கூறி உங்கள் பாஸ்டர்கள் உங்களை மோசம் போக்கி, உங்கள் காணிக்கை, தசமபாகத்தினால் கொழுத்து திரிகிறார்கள். நீங்கள் இதுவரை இதை அறியாதிருக்கிறதென்ன?

**45.** இப்பொழுது இங்கு நன்கு கவனியுங்கள். இந்த ஒவ்வொரு கல்லும், அதாவது இந்த ஒவ்வொரு சுபாவமும் அந்த பிரதான தலைக்கல்லின் ஒரு பாகமே. ஏனெனில் தலைக்கல்லே ஒரு கூர்நுனி கோபுரம். தலைக்கல்லில் இந்த ஏழு சுபாவங்களும் காணப்படுகின்றன. தலைக்கல் வந்து அமர இந்த ஏழு சுபாவங்களும் சரீரத்தில் காணப்பட வேண்டும். மற்றபடி தலைக்கல் சரீரத்தின்மேல் அமராது.

**46.** எபேசு சபைகால மணவாட்டி விசுவாசத்தில் மட்டுமே பூரணப்பட்டிருந்தாள். அது அவளுக்கு போதுமானதாகவே இருந்தது. சிமிர்னா சபை மணவாட்டி விசுவாசத்தோடு வல்லமையும் கூட்டிச் சேர்க்க வேண்டியதாயிருந்தது. பெர்கமு சபை மணவாட்டி விசுவாசத்தோடு, வல்லமையோடு, ஞானத்தை கூட்டிச் சேர்க்க வேண்டியவளாயிருந்தாள். தியத்தீரா சபை மணவாட்டி மேற்கூறிய மூன்று சுபாவங்களோடு தன்னடக்கத்தையும் கூட்டிச் சேர்க்க வேண்டியதாயிருந்தது. சர்தை சபை மணவாட்டி மேற்கண்ட நான்கு சுபாவங்களோடு பொறுமையும் கூட்டிச் சேர்க்க வேண்டியவளாயிருந்தாள். பிலதெல்பியா சபை மணவாட்டி மேலே காணப்பட்ட ஐந்து சுபாவங்களோடு தேவபக்தியையும் கூட்டிச் சேர்க்க வேண்டியதாயிருந்தது. லவோதிக்கேயா சபை மணவாட்டி, அதாவது இந்நாட்களில் தங்களை மணவாட்டி என அழைத்துக் கொள்பவர்கள் விசுவாசத்தோடு, வல்லமையோடு, ஞானத்தோடு, தன்னடக்கத்தோடு, பொறுமையோடு, தேவபக்தியோடு, சகோதரசிநேகத்தையும் கூட்டிச் சேர்த்து, ஏழு சுபாவங்களையும் பூரணப்பட வேண்டியவளாயிருக்கிறாள். பாருங்கள் எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ அவனிடத்தில் அதிகங் கேட்கப்படும் லூக்.12:48. ஏனென்றால் லவோதிக்கேயா சபை மணவாட்டி இயேசு கிறிஸ்துவின் பரிபூரண வெளிப்பாட்டைப் பெற்றவளாயிருக்கிறாள். இவளில் தேவஇரகசியம் நிறைவேறியது.

**47.** லவோதிக்கேயா சபையில் சகோதரசிநேகம் இல்லை என்கிறார்கள். இதன் காரணம் என்ன? இந்த சபைகால மணவாட்டி ஏழு சுபாவங்களிலும் பூரணப்பட வேண்டும். இவள் முதல் ஆறு சுபாவங்களில் பூரணப்பட்டிருந்தால் தான் ஏழாவது சுபாவத்தை பெற முடியும். இவள் முதல் ஆறு சுபாவங்களில் பூரணப்படாததால் சகோதரசிநேகத்தை இவளில் காண முடியவில்லை. இதனால்தான் இந்நாட்களில் நாம் தங்களை மணவாட்டி என அழைத்துக் கொள்பவர்கள் மத்தியில் மாயமற்ற சகோதர சிநேகத்துக்கு பதிலாக மாயையான சகோதரசிநேகத்தை காண்கிறோம். ஆனால் இந்த சபை காலத்தில் நிச்சயமாக கிறிஸ்துவின்

மணவாட்டி உண்டு. அவளிடத்தில் நிச்சயமாக இந்த ஏழு சுபாவங்களும் பூரணமாக காணப்படும். அவள் கிறிஸ்துவின் காணக்கூடாத சரீரத்தில் (Mystical body) அவயவமாய் இருக்கிறாள். அவளிடத்தில் இந்த ஏழு சுபாவங்களும் பூரணப்படும். இப்பொழுது கிறிஸ்துவின் மணவாட்டி மணவாட்டி எனக் கூறிக்கொண்டு வீண் பெருமை பாராட்டும் சகோதரனே சகோதரியே நீங்கள் இந்த ஏழு சுபாவங்களிலும் பூரணப்பட்டிருக்கிறீர்களா? நீங்கள் பூரணப்படாத நிலையில் உங்களை மணவாட்டி, மணவாட்டி என்று உங்கள் பாஸ்டர் சொல்லைக் கேட்டு அழைத்துக் கொள்வதினால் பலன் என்ன? உங்களை நீங்களே ஏமாற்றிக்கொண்டே வருகிறீர்கள். ஏனென்றால் இது மிக்க கொடிய வஞ்சிப்பின் காலம். ஆதலால் தூங்குகிற நீங்கள் இப்பொழுதாவது விழித்து உங்களை ஆயத்தப் படுத்துங்கள், இதோ மணவாளன் வருகிறார். உன் சபை போதகரின் மாய வலையில் சிக்கி மாளாதே. உன் சபை உன்னை இரட்சிப்பதிலை. உன் பாஸ்டர் உன்னை சத்தியத்துக்குள் வழி நடத்துவதில்லை. அவர்கள் உங்களைக் கொண்டு இந்த வனாந்திர ஜீவியத்தில் தங்கள் வயிற்று பிழைப்பை நடத்தி வருகிறார்களேயன்று மற்றபடி அல்ல.

48. ஆக லவோதிக்கேயா சபை மணவாட்டி மேற்கூறிய ஏழு சுபாவங்களிலும் பூரணப்படும் போது நாம் ஒருவரிடத்தில் ஒருவர் அன்பு கூறுவோம். 1பேது.4:12. நன்மை செய்யும்படி நமக்கு திராணியிருக்கும்போது அதைச் செய்யத்தக்கவர்களுக்குச் செய்யாமல் இருக்க மாட்டோம். நமது வங்கி சேமிப்பில், எல்.ஐ.சி.யில் ஆயிரமாயிரமாக சேமிப்பு இருக்கும்போது, தனக்கு தேவை என தங்களிடம் எதிர்பார்க்கும் ஒருவனுக்கு இல்லை என்று சொல்ல மனம் வராது. ஏனென்றால் அவனுக்கு உதவ உனக்கு தகுதி உண்டு. (நீதி.3:27) உன்னிடத்தில் அன்பு இல்லை. இதனால் அவனுக்கு உதவ மனம் இல்லை. ஏனென்றால் அவனுடன் ஒரே சரீரத்தில் நீ மற்றொரு அவயவம் இல்லை. அப்படியிருக்க நீங்கள் ஒருவருக்கொருவர் கட்டிபிடித்து பரிசுத்த முத்தம் எனக் கூறி முத்தமிட்டுக் கொள்ளுவதில் பலன் என்ன? இது மாய்மாலமே! அன்பு நம்மிடத்தில் பூரணப்படுகிறபோது அவர் இருக்கிற பிரகாரமாக நாம் இவ்வுலகில் இருக்கிறோம். 1யோ.4:17. தேவன் அன்பாகவே இருக்கிறார். அன்பில் நிலைத்திருக்கிறவன் தேவனில் நிலைத்திருக்கிறான். தேவன் அன்பில் நிலைத்திருக்கிறார். அப்பொழுது அன்பாகிய தலைக்கல் வந்து அன்பில் பூரணப்பட்ட நம்முடைய சரீரத்தை அதாவது கிறிஸ்து நம்முடைய சரீரத்தை எடுத்துக் கொள்ளுகிறார். அல்லேலூயா! **நாம் ஏழு சுபாவங்களிலும் பூரணப்படும்போது தலைக்கல்லாயிருக்கிற கிறிஸ்து வந்து நம்மை எடுத்துக் கொள்ளுகிறார்.** அந்த தலைக்கல்லானது வரும்பொழுது கிறிஸ்துவின் சரீரமாகிய சபை செதுக்கப்பட்டு பணி தீர்க்கப்பட வேண்டும். கிறிஸ்து வரும்போது அவரும் சபையின் ஊழியமும் சரியாக பொருந்தத்தக்கதாக கிறிஸ்துவை போலவே, அது பரிபூரணமாக காட்சி அளிக்க வேண்டும். அப்பொழுது தான் எடுத்துக்கொள்ளப்படுதலும், நித்திய வீட்டிற்குச் செல்லுதலும் சம்பவிக்கும்.

49. எடுத்துக்கொள்ளப்படுவதற்கு முன்பு நம்முடைய சரீரம் மேற்கண்ட ஏழு சுபாவங்களில் ஒன்றன்பின் ஒன்றாக பூரணப்பட்டு, அடுத்தடுத்து ஒன்றாக இணைந்து கூட்டப்பட வேண்டும். நம்முடைய சரீரம் ஏழு சுபாவங்களை கொண்டு ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைய வேண்டும். ஜீவனுள்ள தேவன் வாசம் செய்ய நம்முடைய சரீரம் ஒரு ஜீவனுள்ள கூடாரமாக ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடைய வேண்டும்.

50. நம்முடைய சரீரம் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சியை அடையும்போது அது நம்மை ஜீவனுள்ள மனிதனாக, தேவனுடைய பரிபூரணத்தின் ஜீவ சாயலாக மாற்றுகிறது. அப்பொழுது தேவன் நம்முடைய சரீரத்தில் வந்து தங்குகிறார். தேவன் நம்முடைய சரீரத்தில் வந்து வாசம் செய்கிறார். நாம் தேவன் வாசம் செய்யும் ஆலயமாக மாறுகிறோம். 1கொரி.3:16. அதாவது தேவன் நமக்குள். கிறிஸ்துவுக்குள் இருக்கும் ஜீவன் உங்களுக்குள் இருக்குமானால் நீங்களும் கிறிஸ்துவின் ஜீவனை பிரதிபலிக்கிறவர்களாயிருப்பீர்கள். உங்கள் ஜீவன் கிறிஸ்துவை பிரதிபலிக்கிறதா? நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமாகிறது 1கொரி.6:19. உங்கள் சரீரம் பரிசுத்த ஆவியின் ஆலயமா?

51. இப்பொழுது நாம் தேவசாயலாய் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனாயிருக்கிறோம் எபே.4:24. இப்பொழுது நான் என்னுடையவன் அல்ல. தேவன் என் சரீரத்தில். தேவன் என் ஆவியில் தம்மை மகிமைப்படுத்துகிறார். 1கொரி.6:20 இனி நான், நான் அல்ல, கிறிஸ்து என்னில் கலா. 6:14, 2:20. தேவன் இந்த சரீரத்திலிருந்து தம்மை வெளிப்படுத்துகிறார் கலா.1:16. சரீர பரிமாணமான ஒரு மனிதனில் தேவன் வாசம் செய்து தன்னை அந்த மனிதனில் பிரதிபலிக்கிறார். தேவன் நமக்குள் இருப்பதினால் நமது சரீரம் அவருடைய ஆலயமாகிறது. தேவன் அங்கிருந்து தம்மை வெளிப்படுத்துகிறார். எல்லா சமயங்களிலும், எப்பொழுதும், தேவன் தம்மை மனிதனின் மூலமாகவே பிரதிபலிக்கிறார்.

52. இப்பொழுது என் சரீரம் தேவன் என்னில் இருந்து தேவன் வாசம் செய்யத்தக்கதான, தேவன் நடக்கத்தக்கதான, தேவன் பார்க்கத்தக்கதான, தேவன் பேசத்தக்கதான, தேவன் கேட்கத்தக்கதான, தேவன் கிரியை செய்யத்தக்கதான ஒரு சரீரமாகிறது.

53. ஆம் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே, நாம் ஜீவனுள்ள தேவன் வாசம் செய்யத்தக்கதான பரிபூரண மனிதன் என்ற கட்டிடத்தை எழுந்து கட்டுவோம். ஒவ்வொரு தனிப்பட்ட நபரையும் தம்முடைய சுபாவத்துக்குள் கொண்டுவர அவர் இந்த ஏழு நிலைகளில் கட்டுவதுபோல, ஏழு சபைகளின் காலங்களையும் அப்படியே அவர் கொண்டு வருகிறார். உயிர்த்தெழுதலில் இந்த முழுமை பெற்ற சரீரமானது உயிர்த்தெழுந்து அவரோடு என்றென்றைக்கும் ஜீவிக்கத்தக்கதான, ஒரு பரிபூரணமுள்ள சபையை அவர் கட்டுகிறார். ஏனென்றால் அது அவருடைய மணவாட்டியாயிருக்கிறது. பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா பூரணமாயிருக்கிறது போல நீங்களும் பூரணமாயிருங்கள். தேவனிடத்தில் உள்ள எல்லா குணாதிசயங்களும் உங்களிள் இருக்கின்றன.

54. சபையானது எங்கு ஆரம்பிக்கப்பட்டது? பெந்தெகொஸ்தே சபையானது, எபேசுவில் பவுலினால் நிறுவனம் செய்யப்பட்டது. பவுல் அப்போஸ்தலன் எபேசு சபை காலத்தின் நட்சத்திரமாக இருந்தான். இரண்டாம் சபையான சிமிர்னா காலம் வல்லமையை குறிக்கிறது. இரினேயஸ் என்னும் மகத்தான மனுஷன் பவுலின்

சுவிஷேசத்தை கடைபிடித்தான். மூன்றாவது சபையின் காலத்தில் மார்டின் என்னும் மகத்தான மனிதன் வார்த்தையில் நிலைத்து நின்றார். நான்காவதான தியத்தீரா சபையின் காலத்தில் கொலம்பாவும், அவருக்கு அடுத்தபடியான இருண்ட காலமாகிய சர்தை சபையின் காலம் வந்தது. சர்தை என்பதற்கு மரணம் என்று பொருள். லூர்தர் இச்சபையின் தூதனாக இருந்தார் விசுவாசத்தினால் நீதிமான் பிழைப்பான் என்று இவர் பிரசங்கித்தார். இதற்கு பிறகு பிலதெல்பியா சபையின் காலம். வெஸ்லி பரிசுத்தத்தையும், தேவபக்தியையும் பிரசங்கித்தார். அதன்பின்பு லவோதிக்கேயா சபையின் காலத்தில் சகோதரசிநேகம் என்னும் செய்தி வந்தது. இக்காலத்துக்குரிய செய்தி, செய்தி என்று மார்பு அடித்துக்கொள்ளுகிறாயே, உன்னிடம் இக்காலத்திற்குரிய செய்தியாகிய சகோதரசிநேகம் உண்டா?

55. இங்கே இந்த ஏழு படிகளையும் ஏழு சபைகளையும் நாம் காண்கிறோம். ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனையும், தேவன் கட்டுவதுபோல தம்முடைய சபையை தேவன் தமக்குள்ளாக கட்டுகிறார். பரிசுத்த ஆவியாகிய கிறிஸ்து வரும்போது சாயங்காலத்திலே வெளிச்சம் உண்டாகும். இயேசு சபைக்கு தலையாக வந்து அமருவார். அவரே சபையாகிய சரீரத்திற்குத் தலையானவர் கொலோ.1:18. சரீரமாகிய சபைக்கு அவரே எல்லாவற்றிற்கும் மேலான தலை எபே.1:23. அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும் நாம் வளர்கிறவர்களாயிருக்க வேண்டும். எபே.4:15. தலை தேவ வளர்ச்சியாய் வளர்ந்தேறுகிற சரீரம் முழுவதையும் ஆதரிக்கிறது கொலோ.2:18.

56. நாம் இந்த கட்டிடத்தை இந்த ஏழு சுபாவங்களை கொண்டு கட்டி முடிக்கும்போது, நாம் **(கிறிஸ்துவின் மணவாட்டி)** பரிபூரண மனிதனின் வளர்ச்சியில் முழுமை பெறும்போது நாம் எடுத்துக்கொள்ளப்படுவோம். **(ஓர் பரிபூரண மனிதனின் வளர்சி**, பத்தி 354) ஆம் நம்முடைய நித்திய வீட்டிற்கு செல்லுவோம். இந்த மனிதன் முழுமை பெறும்போது தேவனுடைய சபையானது எடுத்துக்கொள்ளப்படுதலில் சென்றுவிடும். அங்குதான் அந்த பூரணமானது காணப்படுகிறது.

57. இந்த **கட்டிடத்தை கட்டும் சிற்பிகள் யார்? யார்?** எல்லாம் பூரணமாக்கவும், இந்த சுபாவம் யாவையும் அதனுக்குள் கொண்டு வரவும், தேவனுடைய குமாரனுடைய வருகைக்காக பூரணராகவும், தேவன் சபையில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், போதகர், மேய்ப்பர், சுவிசேஷகர்களை நியமித்திருக்கிறார் **(ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சி**, பத்தி 407, நாள் 14.10.1962)

58. ஆதலால் வளசரவாக்கம் பாஸ்டர் சாமுவேல் அவர்களின் உபதேசம், அதாவது சகோ. பிரன்ஹாமின் ஊழியத்திற்கு பிறகு பாஸ்டர் ஊழியம் மட்டுமே நிலைத்திருக்கிறது. ஆதலால் சபைக்கு அதன் பக்தி விர்த்திக்கு நானே ஆல் இன் ஆல் என்பது பேய்த்தனத்துக்கடுத்தது. பிரியமானவர்களே நீங்கள் சார்ந்திருக்கும் சபைகள் யாவும் இந்நிலையில் தான் உள்ளது. இவைகள் உங்களை ஓர் பரிபூரண மனிதனின் வளர்ச்சிக்கு வழிநடத்த முடியாது. மாறாக உங்களை கொண்டு அவர்கள் தங்கள் வயிற்று பிழைப்பை நடத்த நீங்கள் வழிதிறந்து கொடுக்கிறீர்கள். அதுதான் நடந்துக்கொண்டிருக்கிறது. இது உண்மை. **ஆதலால் நீங்கள் சாப்பிடத்தக்க உணவு எங்கு இருக்கிறதோ அந்த உணவு விடுதியை நோக்கி செல்வது தான் நல்லது. வளர்கின்ற ஒரு ஆவிக்குரிய மனிதனுக்கு உண்ணத்தக்கதான உணவு அவசியமாயிருக்கிறது. அந்த உணவு தேவனுடைய வார்த்தையாயிருக்கிறது. அத்துடன் இக்காலத்திற்குரிய செய்தியையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். தேவனுடைய வார்த்தையிலிருந்தும், இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்தும் நீங்கள் உண்ணத்தக்க ஆவிக்குரிய ஆகாரம் உங்களுக்குத் தேவையென்றால், இருதயத்தில் எழுப்புதல் அடைந்த ஞான இருதயத்தாரராகிய நீங்கள் வாருங்கள், என்னோடு வந்து ஐக்கியம் கொள்ளுங்கள் என கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் உங்களை அழைக்கிறேன். நாளுக்கொரு புதுப்புது, உபதேசங்களை தேவனுடைய வார்த்தைக்கும், இக்காலத்திற்குரிய செய்திக்கும் மாறாக கொண்டு வந்து உங்கள் விசுவாசத்தை சீர்குலைக்கும் உங்கள் சபைகள் மீது வைராக்கியம் வைத்து, அங்கு உங்கள் விளக்கு எரிய வேண்டும் என நீங்கள் விரும்புவீர்களானால், அது உங்கள் விருப்பம், உங்கள் விருப்பத்திற்கு மாறாக நான் ஒன்றும் செய்ய முடியாது.**

59. மற்றவர்கள் என்னைக் குறித்து என்ன வேண்டுமானாலும் கூறிக்கொள்ளட்டும். அது அவர்களுடைய சுதந்திரம். பாஸ்டர் சாமி என்னைக் குறித்து என்னக் கூறுகிறார் என்பதைக் குறித்து எனக்கு கவலையில்லை. திருமண புரோக்கர் பாஸ்டர் பால் செபஸ்டியான் என்னைப் பற்றி என்ன குற்றப்படுத்துகிறார் என்பது குறித்து எனக்கு வருத்தம் இல்லை. இவர்களது குற்றச்சாட்டுகளை நான் ஒரு பொருட்டாக எண்ணுவதில்லை. நான் தனிப்பட்ட மனிதனாக, என்னுடைய ஐக்கியத்தை பிதாவோடும், அவருடைய குமாரனோடும் வைத்துக்கொண்டு மேலும், மேலும் ஊழியத்தின் பாதையில் என் நடையை பல தடைகள் மத்தியில் போராடி தொடர்ந்து கொண்டு இருக்கிறேன். **நீங்கள் அவரோடே கூட நடந்து சென்றால் தான் இந்த பொல்லாத கொடிதான வஞ்சிப்பின் காலத்திலிருந்து உங்களை தப்புவித்துக் கொள்வீர்கள். நீங்கள் உங்கள் பாஸ்டர்களோடு உங்கள் நடைகளை உறுதிப்படுத்திக் கொண்டு செல்வீர்களானால் நீங்கள் வஞ்சிக்கப்படுவீர்கள் என உங்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எச்சரிக்கிறேன்.**

**60. தலைக்கல் 1963–ல் சபை மீது பொருத்தப்படவில்லை.**

அ. வேறொன்றையும் கூற விரும்புகிறேன். இது இணையும் நேரம்... அவர்கள் பூமியிலிருந்து அவனை மகிமைக்குள் எடுத்துக்கொள்ளப்படுதலில் கொண்டு செல்ல இருக்கும் இயக்கும் சக்திக்காக காத்திருக்கின்றனர். அதை நான் முழு இருதயத்தோடும் விசுவாசிக்கிறேன்.. அவரே இயக்கும் சக்தி **(கிறிஸ்து எண்ணப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?** பத்தி 115 நாள் 14.11.1963)

ஆ. மணவாட்டி சபையின் இயக்கம் சக்தி பரிசுத்த ஆவியினால் மறுபடியும் நிறையப்படுவதே. சரீரத்துடன் இணைய தலைக்கல் வந்து கொண்டிருக்கும் நேரத்தில் நாம் பரிசுத்த ஆவியை அளவுடன் பெற்று கிரியை செய்து கொண்டிருக்கிறோம். ஆனால் தலையும் சரீரமும் ஒன்றாக இணையும்போது, பரிசுத்த ஆவியின் முழு வல்லமை அவளை உயிருடன் எழுப்பி மரித்தவர்களும் கூட நூறு ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்துவுக்குள்

மரித்தவர்கள், அவருடைய பரிசுத்த அலங்காரத்துடன் உயிரோடெழுந்து வானங்களின் வழியாக பறந்து செல்வார்கள். இயக்கும் சக்தி பரிசுத்த ஆவியே **(கிறிஸ்து எண்ணப்பட்ட இயேசுவை நான் என்ன செய்ய வேண்டும்?** பத்தி 116 நாள் 14.11.1963)

இ. சபையானது தலைக்கல்லை பெற்றுக்கொள்ள, அந்த நிலைக்கு வர வேண்டியதாயிருக்கிறது. அதன்பின்பு, சரீரம் எழுப்பப்பட்டு பிறகு முழுமையாய் உயிர்த்தெழுதலில் எடுத்துக்கொள்ளப்படும் **(இயேசுவை நோக்கிப் பார்த்தல்,** பத்தி 190, நாள் 22.01.1964)

ஈ. இயேசு திரும்பி வரும்போது முற்றிலும் கழுவப்பட்டதும், கறையற்றதுமான சபையை அவர் காண்பார். அவருக்கிருந்த அதே ஊழியத்தை அது உடையதாயிருக்கும். அது தலைக்கல்லை திரும்பக் கொண்டு வரும். சபையும் கிறிஸ்துவும் ஒன்றாக இணையும்போது, ஒரு மணவாட்டியாக அவர் மேலிருந்த அதே ஆவி தன் மேல் உடையவளாயிருப்பாள். அப்பொழுது சபையானது நீதிமானாக்கப்படுதல், பரிசுத்தமாகுதல், பரிசுத்த ஆவியின் அபிஷேகம் இவைகளிலிருந்து கடைசி நாட்களுக்குள்ளாய் போய், கர்த்தருடைய எடுத்துக் கொள்ளப்படுதலுக்காய் சரியாக தீட்டப்படுபவளாய் இருப்பாள். **(வெளிச்சத்தை பிரகாசிக்க செய்,** பத்தி 102, 104, நாள் 25.01.1964)

உ. லூத்தர், வெஸ்லி, பெந்தெகொஸ்தேயினரின் மகத்தான சீர்திருத்தங்களை நாங்கள் கண்டோம். இப்பொழுதோ நாங்கள் நகரத்தின் தலைக்கல்லுக்காக காத்திருக்கிறோம் **(பரலோக மணவாளன் மற்றும் பூமிக்குரிய மணவாட்டியின் வருங்கால இருப்பிடம்** பக்கம் 101, பக்கம் 100–ன் கடைசி பத்தியின் தொடர் நாள் 02.08.1964)

ஊ. அவர் சீக்கிரமாக வந்து சரீரத்தை உரிமைகோரி பெற்றுக்கொள்வார். ஆமென்! தலையானது சரீரத்துக்கு வருகிறது. உங்களுக்கு புரிகிறதா? (கே.ப. 291 பத்தி 116 நாள் 23.08.1964)

எ. மணவாட்டி என்பவள் இப்பொழுது பூமியில் உள்ள சிறு குழுவை மாத்திரம் கொண்டவளாக இருக்க மாட்டாள். ஏழாம் ஜாமத்தில் அவர் வந்தபோது அந்த கன்னிகைகள் அனைவரும் எழுந்து தங்கள் தீவட்டிகளை சுத்தப்படுத்தினர். முன் காலங்களில் இருந்தவர்கள், காலங்கள் தோறும் அபிஷேகம் பண்ணப்பட்ட வார்த்தையை விசுவாசித்த ஒவ்வொருவரும் உயிரோடுடெழும்புவார்கள். கூர்நுனி கோபுரம் போல (கீழ்பாகம்) மேலே வருகின்றது. ஆனால் தலைக்கல் வந்து எல்லாவற்றையும் சேர்த்து, கூர்நுனி கோபுரத்தை முழுமைப்படுத்தும், பாருங்கள், அவைகளை ஒன்று சேர்க்கும் மணவாட்டி என்பவள் காலங்கள் தோறும் விசுவாசித்து கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக ஏற்றுக் கொண்டவர்களை கொண்டவளாக இருப்பாள் **(யார் இவர் என்று சொல்லுகிறீர்கள்** பத்தி 117, நாள் 27.12.1964)

ஏ. சபை இன்னும் பூரணப்படவில்லை **(மணவாட்டியை தெரிந்துகொள்ளுதல்,** பக்கம் 41, 42, நாள் 29.04.1965)

ஐ. ஓ கர்த்தராகிய இயேசுவே, மகத்தான தலைக்கல்லே வாரும் **(தேவனால் அருளப்பட்ட ஒரே ஆராதனை ஸ்தலம்** பத்தி 279 நாள் 28.11.1965)

61) தீர்க்கதரிசியின் செய்தியிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கண்ட தொகுப்புகளில் இருந்து தலைக்கல் சரீரத்தில் 1965 வரை பொருத்தப்படவில்லை என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள். அக்கல்வரும்போது, அப்போது என்ன நடந்தது? அந்த கல் வரும்போது, புறஜாதிகளின் காலம் முடிவடைந்ததினால், சபையானது எடுத்துக்கொள்ளப்படுதலில் மகிமையில் உன்னதத்திற்குச் சென்றுவிட்டது. தேவனே புறஜாதி காலத்தை முடிவடையச் செய்கிறார் **(தானியேலின் எழுபது வாரங்கள்** பக்கம் 195, பத்தி 137) இதுவரை கிறிஸ்துவின் சரீரம் பரிபூரணப்படவில்லை. ஏனென்றால் கடைசி ஆடு இன்னும் மந்தையில் வந்து சேரவில்லை. கடைசி ஆடு மந்தையில் வந்து சேராதவரை மந்தை பூரணமாகாது, சபை பூரணமாகாது. சபை பூரணப்பட்டு விட்டால் இரட்சிப்பின் சுவிசேஷத்தை பிரசங்கிக்க தேவையில்லை. ஏனென்றால் அப்பொழுது பரிசுத்த ஆவி எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கும். மனம் திரும்புதல் இருக்காது.

62. ஆக ராஜாவின் உபதேசம், சூளை இயேசு கிறிஸ்துவின் ஜெபவீட்டின் போதனையான 1963–ல் தலைக்கல் சபையில் பொருந்தப்பட்டுவிட்டது. ஆனால் அது தனிப்பட்ட மனிதனில் இன்னும் பொருத்தப்படவில்லை என்பது மாய்மாலமான ஓர் துர்உபதேசம், போதனை. சபை இன்னும் பூரணப்படவில்லை, ஒரு தனிப்பட்ட மனிதன் இன்னும் பரிபூரண வளர்ச்சி அடையவில்லை. சபை பூரணப்பட்டு அதாவது தனிப்பட்ட மனிதன் கிறிஸ்துவின் ஏழு திவ்விய சுபாவங்களில் பரிபூரண வளர்ச்சியை அடையும்போது எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழும். 1963–ல் சபை பூரணப்பட்டு, தலைக்கல் பொருத்தப்பட்டு விட்டது என்றால் தனிப்பட்ட மனிதன் பரிபூரண வளர்ச்சி அடைந்து எடுத்துக்கொள்ளப்படுதல் நடந்திருக்க வேண்டும். ஆதலால் இந்த லௌகிக, பேய்த்தனத்துக்கடுத்த உபதேசத்தை விட்டு விலகி, உங்கள் விசுவாசத்தை கவிழ்த்துப் போடும் இந்த போதனையை விட்டு விலகி உங்களை காத்துக்கொள்ளுங்கள் என கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் உங்களை எச்சரிக்கிறேன். நீங்கள் தேவனுடைய குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்களானால் நான் உங்களை கண்டித்து உணர்த்தும்போது அதற்கு செவி கொடுப்பீர்கள்.

63. முடிவாக, என் மனம் இன்னும் ஒன்றைத் தேடுகிறது, அதை நான் கண்டுபிடிக்கவில்லை. எங்கு பார்த்தாலும் பண ஆசை, சுயநலம், மனமேட்டிமை நிறைந்து காணப்படும் கொடிய காலங்களில் தேவனுடைய வார்த்தையில் நிலைத்து நிற்கிறோம், இக்காலத்திற்குரிய செய்தியை அடையாளம் கண்டு அதில் நிலைத்திருக்கிறோம், நாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என்று மேன்மை பாராட்டுகிறவர்கள் மத்தியில் நான் அறிய கிறிஸ்துவின் மணவாட்டியின் தகுதிகளை உடைய, குணாதிசயங்களை உடைய, கிரியைகளை தன்னில் வெளிப்படுத்தும் ஒரு நபரைக் கூட என் கண்களால் காண முடியவில்லை. நீங்கள் கண்டுபிடித்துள்ளீர்களானால் தயவு செய்து அந்த நபரை நானும் அறிந்து கொள்ள எனக்கு தகவல் கொடுத்து ஒரு உதவி செய்வீர்களா? உங்கள் உதவிக்கு நன்றியுள்ளவனாக இருப்பேன். இதுமிக்க கொடிதான வஞ்சிப்பின் காலமாக இருப்பதால், மக்கள் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என்று அழைத்துக்கொண்டு தங்களைத்தாங்களே வஞ்சித்துக்கொண்டு வருகிறதயே நான் காண்கிறேன். கிரியை இல்லாத இவர்கள் விசுவாசம் செத்ததே! கிரியைகள் இல்லாத வீண் பந்தாவையே எங்கும் காண்கிறேன். இதை மாத்திரம் கண்டேன்.

கிருபையானது உங்கள் அனைவரோடும் கூட இருப்பதாக. ஆமென்.

கிறிஸ்துவின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**

# மேகம் போன்ற இத்தனை திரளான சாட்சிகள் தேவனுடைய சபையில் இருக்க

1. நான் இந்த செய்தித்தொகுப்பை எழுதிக்கொண்டிருக்கும் சமயத்தில் 07.06.2006 மற்றும் 12.06.2006 தேதியிடப்பட்ட இரு சுற்றறிக்கைகள் பொய்யையும், புரட்டுகளையும், பொய்யாணைகளையும் தன்னகத்திலே கொண்டு, ஒரு காரியத்தை பிணைத்து அதை உண்மைபோல் காட்டுவதில் யுக்தியும், புத்தியும், அறிவும் உடையவனாகிய ராஜாவினிடமிருந்து வந்தது. 07.06.2006 சுற்றறிக்கைக்கு "மறுப்பு அறிக்கை பதில்" என தலைப்பு கொடுக்கப்பட்டு, அது ஐந்து பக்கங்களை கொண்டது. 12.06.2006 ஒரு பக்க சுற்றறிக்கையாக இருந்தது.

2. 07.06.2006 மறுப்பு அறிக்கை பதிலில் **ராஜா எழுதிய காதல் கவிதைகள்** என்று நான் ஜூன் 2006 செய்தித்தொகுப்பில் பிரசுரித்ததற்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் தெரிவித்துக்கொள்வதாக எழுதப்பட்டிருந்தது. மேலும் தனது 16 ஆண்டு கால ஊழியத்தில் (1990 – 2006) நான் எழுதிய பிரகாரம் அவன் எந்த பெண்களிடமும் தவறாக நடந்து கொள்ளவில்லை எனவும், எந்த வாலிபனிடமும் ஆண்புணர்ச்சி கொள்ளவில்லை எனவும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமத்தினால் தெரிவித்துக்கொள்வதாகவும் எழுதியிருந்தது.

3. மேலும் நான் என் ஜூன் 2006 செய்தித்தொகுப்பில் பிரசுரித்தது ராஜா என்மீது போட்டிருக்கும் வழக்கிலிருந்து தப்பிக்கொள்ள ஒரு கட்டுக்கதை என எழுதியிருந்தது. மேலும் நான் ராஜாவை பழிவாங்கவும், ராஜவினுடைய குடும்பத்தையும், பாஸ்டர் மேத்யூ செல்லப்பா வீட்டில் பிரச்சனைகளை ஏற்படுத்தவும், வேறு ஒரு பெண்ணின் வாழ்க்கையை கேடகமாக பயன்படுத்தி நான் என்னை காப்பாற்றிக்கொள்ள முயற்சிப்பதாகவும் எழுதியிருந்தது. ஜூன் 2006 செய்தித்தொகுப்புக்காக நான் ஒருவரிடம் கை நீட்டி பணம் வாங்கியிருந்ததாகவும் எழுதியிருந்தது. இந்த மாய்மாலக்காரன் என்றுமே ஆதாரங்களோடு எதையும் எழுத மாட்டான் என்று உங்களுக்கு நன்றாக தெரியும். நடக்காத சம்பவங்களை நடந்ததுபோல் ஜோடித்து எழுதுவதில் இவன் மிகவும் கில்லாடி என்பதும் உங்களுக்கு நன்றாக தெரியும். ஆக யாவும் ஆதாரம் இல்லாத குற்றச்சாட்டுகளாகவே காணப்பட்டது.

4. இவன் பண மோசடி செய்த சம்பவங்களில் பின்னனி உண்மைகள் வேறு என்று எழுதி, பணமோசடி நடந்தது உண்மைதான் என ஏற்றுக்கொண்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

5. இவனால் பாதிக்கப்பட்ட ஆண், பெண் யாரும் இவன் மீது வழக்கு தொடரவில்லை. ஏனென்றால் அவர்கள் அனைவரும் விசுவாசிகள். மேலும் ஓர் ஆண் தன்னை ஒருவன் ஆண்புணர்ச்சி செய்தான் என்று ஊர் ஊராக சொல்லிக்கொண்டு திரியமாட்டான். அவ்வாறாக ஒரு பெண்ணும், ஏனென்றால் அதில் அவர்கள் வாழ்க்கை பாதிக்கப்படும். ஆனாலும் நடந்த சம்பவங்கள் வெளிவராமல் இருக்காது. ஏனென்றால் அனைத்து இடங்களிலும் அடிமிதி பட்டான். இவனுடைய காமவிகார நடத்தைகளில் சம்பந்தப்பட்ட பெண்கள், ஆண்கள் தனிப்பட்ட முறையில் எழுதிய கடித சாட்சிகள் என்னிடம் இன்றும் உண்டு. அவைகளை ஏற்ற வேளையில் பிரசுரிப்பேன். இந்த சம்பவங்கள் நடந்த அந்தந்த சபையோடு காரியங்கள் முற்றுபுள்ளி வைக்கப்பட்டது. ஆனாலும் என்னைப்போன்ற ஊழியர்களுக்கு சம்பவங்கள் யாவும் தெரிவிக்கப்பட்டன. நாங்கள் சபைகளை எச்சரிக்கலானோம். பின் காலப்போக்கில் சம்பவங்கள் கொஞ்சம் கொஞ்சமாக பல இடங்களில் பரவின. அநேகர் ராஜாவை குறித்து எச்சரிக்கை அடைந்தார்கள்.

6. எனக்கு ராஜா எழுதியபடி இவன் மீது எந்தவிதமான போட்டியும், பொறாமையும் கிடையாது. மாறாக ஆரபம் நாட்களில் இவனுக்கு நான் பலவகையில் ஊழியத்தின் பாதையில் மிகவும் ஒத்தாசையாக இருந்தேன் என்பதை இவனே தன் சுற்றறிக்கையில் எழுதியுள்ளான். இவன் ஊழியத்தின் பாதையில் இவனுடைய காமவிகார நடத்தைகள் ஒன்றன் பின் ஒன்றாக தொடர் சங்கிலிபோல் இருந்து வந்ததால் இவனைக் குறித்து தேவனுடைய சபையை எச்சரிக்க வேண்டியது என்மேல் விழுந்த கடமையாயிற்று. ஆனாலும் இவனுடைய காரியங்களை அறியாதவர்கள் இவனை ஊழியத்தில் எடுத்து உபயோகித்தது உண்டு. இவனுடைய காரியத்தை அறிந்தபின் இவனை மிதித்து வெளியே தள்ளினவர்களும் உண்டு. அவன் எப்படியிருந்தாலும் சரி, அவன் நம்முடைய ஜாதிக்காரன் என்ற அடிப்படையில் இவனை இன்னும் கொஞ்சுகிறவர்களும் உண்டு.

7. நான் அன்று முதல் இன்றுவரை இவனுடைய காமவிகார நடத்தைகளை குறித்தும் இவனுடைய தவறான உபதேசங்களை குறித்தும் நான் கண்டவற்றயும், கேட்டவற்றையும், பிறருடைய சுற்றறிக்கைகள் மூலமாக அறியவந்ததையும் கொண்டு தேவனுடைய சபையை எச்சரித்து எழுதி வந்துள்ளேன். ஆனால் இவன் இதுவரை நான் எழுதியவைகள் தவறு என்று ஒருகாலும் மறுப்பு அறிவிக்கவில்லை. ஆனாலும் காலேப் யோசுவா எழுதிய செய்தித் தொகுப்புகளை முறியடித்துவிட்டேன், முறியடித்துவிட்டேன் என நாய் சந்திரனை பார்த்து குரைப்பது போன்று இந்நாட்களில் தான் குரைக்க ஆரம்பித்துள்ளான். முன் நாட்களில் அமைதியாக இருந்தான்.

8. இந்த புரட்டன் எழுதியபடி அரசாங்கம் என் மீது எந்த வழக்குகளும் நீதிமன்றங்களில் தொடரவில்லை. இது மக்களை திசை திருப்ப பொய்யனது புழுவுகளில் ஒன்று. இவன் வாயில், எழுத்தில் என்றும் உண்மை என்பது கிடையாது. இவன் உள்ளம் கேடுபாடுள்ளது.

9. இவன் எழுதிய காதல் கவிதையைக் குறித்து கோவை அருகில் உள்ள கருமத்தம்பட்டி காவல் நிலையம் சாட்சி கூறும். அங்கு இவன் எழுதிக் கொடுத்த மன்னிப்புக் கடிதம், பைபிள் மற்றும் டைரி காவல் நிலையத்திலே உள்ளது என அறியவந்தேன். மேலும் காவல் நிலையம் மட்டும் அல்ல, அந்த ஊரில் உள்ள

பல மனிதர்கள் இந்த காவல் நிலையம் சம்பவத்திற்கு சாட்சிகளாக இருக்கிறார்கள். காவல் நிலையத்தில் அனைவரும் இவனுடைய இளம்பிராயம், மனைவி, குழந்தைகள் நலனை கருத்தில் கொண்டும், இவனுடைய காமச்செயல்கள் தன் மனைவியின் உடன் பிறந்த தங்கையிடமாக இருந்ததினாலும், மேலும் இதினால் குடும்ப கௌரவங்கள் பாதிக்கப்படும் என்பதினாலும் இவனை காவல் நிலையத்தில் ஒப்புக்கொடுக்க, அங்கு இவனுக்கு தகுந்த மரியாதை செலுத்தப்பட்டது. இவன் தன் தவறை ஏற்றுக்கொண்டு 27.04.2006 அன்று காவல் நிலையத்தில் மன்னிப்புக் கடிதம் கொடுத்ததாலும், அனைத்து சம்பவங்களையும் மறந்து மன்னித்து, இவன் மறுவாழ்வு வாழ அனுப்பி வைத்தனர். ஆனாலும் இவன் சம்பந்தப்பட்ட பெண் வீட்டாரை மிரட்ட ஆரம்பித்தால், அவர்கள் நடந்த சம்பவத்தை வெளியே கூற ஆரம்பித்தனர். மற்றபடி நடந்த சம்பவங்கள் வெளி இடங்களுக்கு தெரியாமல் இருந்திருக்கும்.

10. காரியம் இப்படியிருக்க இந்த மாய்மாலக்காரன் எழுதியதுபோல் நான் பாஸ்டர் மேத்யூ செல்லப்பாவிடம் எதுவும் எழுதிக் கேட்கவில்லை, அவருடைய மனைவி காலில் விழுந்து மன்னிப்பு கேட்கவும் இல்லை. நான் இதுவரை என் ஊழியத்தின் பாதையில் பாஸ்டர் மேத்யூ செல்லப்பா வீடு சென்றதே கிடையாது. ஆக இதுவும் இந்த புரட்டனுடைய மாயையான தந்திரமான விமர்சனங்களே. இவன் நிச்சயமாக பிசாசுதான்.

11. முடிவில் தாவீது, சிம்சோன், நோவா, ரூபன், இவர்களை காட்டிலும் தான் பாவம் அதிகம் எதுவும் செய்யவில்லை என எழுதி தனது காமலீலைகளை நியாயப்படுத்தி அவைகளை ஒத்துக்கொண்டது குறித்து மகிழ்ச்சி அடைகிறேன்.

12. அடுத்து என்மீது இன்னும் அநேக வழக்குகள் நீதிமன்றத்தில் தொடர இருப்பதாக மிரட்டப்பட்டுள்ளது. நான் இவனது வழக்குகளை சந்திக்க வேண்டிய நேரத்தில் நிச்சயமாக சந்திப்பேன். இந்நாட்களில் நான் சாத்தானால் சரீரத்தில் தாக்கப்பட்டதினால் சில காலதாமதங்கள். சாத்தான் தேவனுடைய பிள்ளைகளை மேற்கொண்டதாக சரித்திர சான்று கிடையாது.

13. பொய்யை பிரயோகிக்க தன் நாவை பழக்கி அதை வில்லாக வளைத்து தனக்கடுத்தவர்களை இதுவரை அதாவது 1990 முதல் 2006 வரை எய்த்துக் கொண்டு வரும் ராஜா தமிழ்நாடு அறிய, சிரிக்க செய்தியிலுள்ள ஊழியர்கள், விசுவாசிகள் பலர் ஏளனமாக பேச, நடந்த சம்பவங்களை நடக்கவில்லை என கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவின் நாமம், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வல்லமையுள்ள நாமம் மேல் தன் இருதய கபடத்தினால் ஆணையிட்டு மறுப்பு தெரிவிப்பதால் தன்னை நீதிபரனாக்க முடியுமா? முடியவே முடியாது! அந்த கறைகள் அவன் வாழ்நாள் முழுவதும் இருந்துகொண்டே இருக்கும். பொய்யைச் சார்ந்து பொய்யை அடைக்கலமாக கொண்டு, மாயையின் மறைவிலே நீ எத்தனை காலம்தான் உன்னை மறைத்துக்கொள்வாய்? பொய் என்னும் உன்னுடைய அடைக்கலத்தை கல்மழை அழித்துவிடும், பொய் என்னும் உன் மறைவிடத்தை ஜலப்பிரளயம் அடித்துக்கொண்டு போகும் என்பதை மறவாதே! தேவனுடைய சபை உன்னை அடையாளம் கண்டுகொண்டதே! செம்மறி ஆடுகள் இனி உன் பின் வருவதில்லை. அதற்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன். வெள்ளாடுகளை பற்றி எனக்கு கவலை இல்லை. நீ அவைகளுக்கே சுவிசேஷகனாக இருப்பதினால் உன்மீது பொறாமைக்கொள்ள எனக்கு எள்ளளவு கூட காரணம் இல்லை. ஆனால் தேவனுடைய மந்தையாகிய செம்மறி ஆடுகளை நீ பீறிப் போட முயற்சிக்கும் போது நான் உன்னை எதிர்த்து நிற்பேன். அவைகளை பாதுகாக்க வேண்டியது என் மேல் விழுந்த கடமையாயிருக்கிறது. துன்மார்க்கனுடைய செயலை நான் கண்டிக்காமல் இருக்க முடியாது.

14. தீர்க்கதரிசகள் என் நாமத்தைக் கொண்டு பொய்யாய் தீர்க்கதரிசனம் சொல்லுகிறார்கள். எரே.14:14. கர்த்தருடைய ஜீவனைக் கொண்டு சொல்லுகிறோம் என்றாலும், பொய் ஆணையிடுகிறார்கள். எரே.5:2. ஆதலால் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் கூறுகிறேன் என்று நீ கூறுவதினால் உண்மை என்றும் பொய் ஆக மாறிவிடாது. தேவனுடைய வார்த்தை தேவனுடைய சபைக்கு உன்னை அடையாளம் காட்டிற்று.

15. உன் தேவனாகிய கர்த்தருடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக; கர்த்தர் தம்முடைய நாமத்தை வீணிலே வழங்குகிறவனை தண்டியாமல் விடார் யாத்.20:5. ஆதலால் நாம் உள்ளதை உள்ளதென்றும், இல்லதை இல்லதென்றும் சொல்ல வேண்டும். இதற்கு மிஞ்சினது தீமையினால் உண்டாயிருக்கும். மத்.5:37. ஆதலால் உன் ஆணை தீமையினால் உண்டானது. அதற்கு மேகம் போன்ற திரளான சாட்சிகள் தேவனுடைய சபையில் உண்டு.

16. பொய் பேசுகிறவர்களை அழிப்பீர் என சங்கீதக்காரன் கூறுகிறான். சங்.5:6. பொய் சொல்லுகிறவன் என் கண்முன் நிலைப்பதில்லை எனவும் கூறுகிறான். சங். 101:7. நான் பொய்யானை இடுகிறவர்களுக்கு விரோதமாய் தீவிரமான சாட்சியாய் இருப்பேன் என்று சேனைகளின் கர்த்தர் கூறுகிறார். மல்.3:5 கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு பொய்யாணை இடுக்கிறவன் நிர்மூலமாக்கப்படுவான். சகரி.5:4. கர்த்தருடைய நாமத்தைக் கொண்டு பொய்யாணையிடுவது, தேவனுடைய நாமத்தை பரிசுத்த குலைச்சலாக்குவதாகும். லேவி.19:12. இந்த வாக்கியங்களின்படி இந்நாட்களில் இவனுடைய ஊழியம் நிர்மூலமாக்கப்பட்டு வருவதை காண்கிற கண்கள் பாக்கியமுள்ளவைகள். அவனே இது குறித்து தனது 14.07.2006 சுற்றறிக்கையில் எழுதியுள்ளான். இந்நாட்களில் தன் அடைக்கலத்துக்காக புதுப்புது இடங்களை தேடி, ஓடி அலைகிறான். ஆங்காங்கு இவனைக் குறித்து அறியாத ஒரு சிலர் அவ்வப்போது இவன் கண்ணியில் விழுந்து விடுகிறார்கள். உடனே பத்து நோட்டீஸ் அடித்து விளம்பரப்படுத்தி, ஒரு கைவிரல்கள் எண்ணிக்கை உள்ள ஜனங்களை கொண்டு ஏதோ ஒரு பெரிய ஊழியம் நடப்பதாக மக்களை மயக்குகிறான். ஏமாளிகள் ஏமாறுகிறார்கள். சாத்தான் ஜனங்களை சத்தியத்துக்கு கீழ்படியாமல் கட்டு கதைகளுக்கு கீழ்படியும்படி பொய்யானவைகளை போதிக்கும்படி, தன்னுடைய கூலியாளாகிய இவன் மூலம் அன்று முதல் செயல்பட்டு வருகிறான். ஜனங்களும் இவனை பின்பற்றி பொய்யையும், கட்டுக்கதைகளையும் நம்பி மோசம் போகிறார்கள். இது கொடிதான வஞ்சிப்பின்காலம்.

17. இயேசு: சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க நான் பிறந்தேன். இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன் யோ.18:37. சத்தியத்தை குறித்து சாட்சி கொடுக்க வந்தவரின் மணவாட்டி நாங்கள் என தங்களது விசுவாசத்தில் உறுதியாக இருக்கும் மேகம் போன்ற திரளான சாட்சிகள் தேவனுடைய சபையில் ஊட்டி, கோவை, திருப்பூர், பொள்ளாச்சி, திருச்சி, வேலூர், சென்னை, பொன்னேரி, கும்மிடிபூண்டி போன்ற இடங்களில் இருக்கிறார்கள். ஒருவேளை சில சம்பவங்கள் நடந்து காலங்கள் 10–12 ஆண்டுகள் ஆகிவிட்டன, ஆதலால் காலேப் யோசுவாவுக்கு சாட்சிகள் கிடைக்காது என ராஜா நினைக்கலாம். ஆனாலும் சத்தியத்தைக் குறித்து சாட்சி கொடுக்க சத்தியவான்கள் இன்னும் தேவனுடைய சபைகளில் இருக்கிறார்கள் என்பதை மறந்துவிட்டான் போலும். அவர்கள் திரளாக, நீதிமன்றத்துக்கு வந்து சாட்சி கூறுவார்கள். **இந்த சாட்சிகள் காலேப் யேசுவாவுக்கு சாதகமாகவும், ராஜாவுக்கு விரோதமாகவும் இல்லை. மாறாக சத்தியத்திற்கு சாட்சியாக திரண்டு வருவார்கள் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.**

18. இவன் தனது 07.06.2006 சுற்றறிக்கையில் எழுதுவது போல எனக்காக இவனை யாரும் மிரட்டுவதும் கிடையாது. இவனிடம் சென்று எனக்காக வக்காலத்து வாங்குவதும் கிடையாது. ஆனால் அப்படி நடப்பதாக கூறி ஜனங்களை திசை திருப்ப, தன்னை மிகைப்படுத்தி எழுதுவது இவனுடைய எழுத்து தந்திரம். மேலும் இவன் பக்கா தந்திரவாதி என்பதை தேவனுடைய பிள்ளைகள் அறிவார்கள்.

19. கடந்த 16 ஆண்டுகளாக இவன் செய்துவரும் கள்ள உபதேசங்கள், அக்கிரமங்களை விசுவாசிகள் கண்டு, இவனை விட்டு விலகி, இவன் எக்கேடும் கெட்டுப்போகிறான் என்று விட்டுவிட்டு வந்ததினாலும், இவனுக்கு சரியான தண்டனையும் அவ்வப்போது கிடைக்காததினால் இவன் இருதயம் கொழுத்து மீண்டும் மீண்டும் அதே தவறுகளை செய்யலானான். இதனால்தான் இன்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் நடந்ததை நடக்கவில்லை என எழுதும் அளவுக்கு துணிகரம் கொண்டுள்ளான். இதற்கெல்லாம் காரணம் யார்? தேவனுடைய பிள்ளைகள் தான். அவர்களுடைய பெருந்தன்மை. அவர்களுடைய மன்னிக்கும் சுபாவம்.

20. முடிவாக யார், யாருடைய உபதேசங்களுக்கு ஈடு கொடுக்க முடியாமல் திணறுவது, கள்ள உபதேசங்களை யார் அன்று முதல் இன்று வரை முறியடித்து வருவது, யார் கள்ள கபடமுள்ள வேலையாட்களை சுட்டிக்காட்டி தேவனுடைய சபையை எச்சரித்து வருவது என்பது தேவனுடைய சபைகளுக்கு நன்றாக தெரியும். உன் கண்களும், உன் மனதுமோவென்றால் தற்பொழிவின் மேல் அல்லாமல் வேறொன்றின் மேலும் வைக்கபடவில்லை என்பதும் தேவனுடைய சபைகளுக்கு நன்றாக தெரியும். ஆதலால் உன்னுடைய கள்ள எழுத்தாணியால் நீ தேவனுடைய மந்தையிலுள்ள செம்மறி ஆடுகளை ஒருகாலும் வஞ்சிக்க முடியாது, முடியவே முடியாது! உன்னைக்குறித்து என் பணி முடிந்துவிட்டது. உன்னை தேவனுடைய சபைக்கு வெளிப்படுத்திவிட்டேன். நீ யார் என்பதை அவர்கள் அறிந்துகொண்டார்கள், புரிந்துகொண்டார்கள். அத்துடன் உன்னைக் குறித்து என் பணி முடிந்தது.

21. உள்ளந்திரியங்களையும், இருதயத்தையும் சோதித்தறிகிற நீதியுள்ள நியாதிபதி நீதியை சரிகட்டுகிறதை காண்கிற கண்கள் பாக்கியமுள்ளது.

**சகோ. காலேப் யோசுவா**

# நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகமாயிருக்கும்; கர்த்தர் அவைகளெல்லாவற்றிலும் நின்று அவனை விடுவிப்பார். சங் 34:19

1. 2006 ஜூலையில் 14.07.2006 தேதி இடப்பட்டு "கோவை நீதிமன்றத்தில் இருந்து காலேப் யோசுவாவிற்கு பிடிவாரண்ட்" என்ற தலைப்பில் மற்றும் "மாரடைப்பு, இரத்த வாந்தி, இரணிய ஆபரேஷன் செய்து, சிறுநீர் கழிக்கவும், ட்யூப் பொருத்தப்பட்டு கஷ்டப்படும் காலேப் யோசுவா பூரண குணமடைய ஜெபித்துக்கொள்ளுங்கள்" என்ற சிறிய தலைப்பில் மூன்று பக்கங்கள் கொண்ட ஒரு சுற்றறிக்கை சாத்தானிடமிருந்து எனக்கு வந்தது. அதை பார்த்தவுடன். **"ஆடு நனைகிறதே என்று ஓநாய் கவலைப்பட்டதாம்"** என்ற பழமொழி தான் எனக்கு நியாபகம் வந்தது.

2. காலேப் யோசுவா தேவனுடைய இராஜ்யத்திற்கென்று, இக்காலத்திற்குரிய செய்திக்கென்று, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைவதற்கென்று ஓயாமல் உழைத்ததினாலும், பசி தாகத்தை அனுபவித்துக்கொண்டு இருந்தாலும், பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டதினாலும், குடும்பபாடுகள் நெருக்கி வந்துகொண்டிருந்ததினாலும் சற்று மன உளைச்சலுக்குள் இருந்த வேலையில் சாத்தானால் தாக்கப்பட்டு சரீரத்தில் வியாதிப்பட்டது மெய்தான். சாத்தான் என் மன உளைச்சலை தனக்கு சாதகமாக்கிக் கொண்டு தக்க சமயம் பார்த்து என்னை தாக்கினான். என்னை வாதித்தான். ஆனாலும் என்னை ஆட்கொண்டு, என்னை ஊழியத்திற்கென்று அழைத்த தேவன், நான் ஆராதிக்கும் தேவன் எனக்கு இரங்கினார். அவருடைய காயப்பட்ட தழும்புகளால் குணமானேன். அல்லேலுயா! கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

3. என்னுடைய இந்த வானந்திர யாத்திரையில் சுமார் 57 ஆண்டுகள் நான் அறிய பெரிய வியாதிகள் எதுவும் என்னை தாக்கியது கிடையாது. இதில் சுமார் 24 ஆண்டுகள் கிறிஸ்துவுக்குக்கென்று என்னை அர்ப்பணித்து, அவர் கொடுத்த ஊழியத்தை, பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலின்படி செய்து வந்தேன். பணத்திற்கோ, புகழுக்கோ நான் என்றும் அடிமையானதில்லை. நான் எனக்கென்று ஒரு குரூப்பை ஆதாயப்படுத்த முயற்சித்ததும் இல்லை. பண உதவி செய்கிறவர்கள் தவறான பாதையில் செல்கிறதை கண்டதும் அவர்களை கண்டிக்காமல் விட்டதும் இல்லை. இதனால் பணம் படைத்தவர்களின் வெறுப்புக்கும்

ஆளானேன். அவர்கள் செய்யும் உதவிக்காக அவர்களை புகழ்ந்து கொண்டேயிருக்கவில்லை. அவர்கள் எனக்கு உதவி செய்வது, ஆவியானவருடைய வழி நடத்துதலின்படி ஒரு தேவனுடைய மனுஷனுக்கு உதவிகள் செய்கிறார்கள் என்றே நினைத்தேன். அதற்குரிய பலனை தேவன் தாம் அவர்களுக்கு கொடுப்பார் என்ற மனப்பான்மை உள்ளவனாய் இருக்கிறேன். ஏனென்றால் உதவிக்கு மறுஉதவி செய்யும் நிலையில் நான் இல்லை. மாறாக, நான் நம்பியிருக்கிறவர் எனக்காக யாவற்றையும் செய்து முடிக்கிறார். மேலும் சத்தியத்தை எடுத்துக் கூறி வருவதினால் சத்துருவானேன். அதைக் குறித்து நான் என்றுமே கவலைப்பட்டதேயில்லை. ஏனென்றால் நான் விசுவாசிக்கிறவர் எனது நிழலாக என்னோடு இருக்கிறார். ஆதலால் எதைக் குறித்தும் கவலைப்படாது கடின உழைப்புடன் தேவன் எனக்கு கொடுத்த ஊழியத்தில் உண்மையும், உத்தமமும், உறுதியுமாக இருந்து வருகிறேன். இதற்கு எனக்குள் வாசம் செய்யும் பரிசுத்த ஆவியானவரே சாட்சி. மனுஷருடைய சாட்சி இது குறித்து எனக்கு தேவையில்லை.

4. வாழ்விலும், தாழ்விலும், சுகத்திலும், துக்கத்திலும், நான் கிறிஸ்துவுக்குள் மனரம்மியமாக வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் 11.11.2001 கடின உழைப்பிற்கு பின் இரவு 8.00 மணி அளவில் எனக்கு இருதயத்தில் முதன் முதலாக வலி ஏற்பட்டது. சாத்தான் என்னை வாதித்தான். ஆனாலும் கர்த்தர் அதை அனுமதித்தார். விபரம் தெரியாத நிலையில் வலி சிறிது குறைந்தவுடன் குளிப்பதற்கு சென்றேன். குளித்து கொண்டிருக்கும் வேளையில் இருதயவலி மிகவும் அதிகமானது. வீட்டிற்குள் வந்து கட்டிலில் அமர்ந்து ஓய்வெடுக்க ஆரம்பித்தேன். ஆனாலும் இருதயவலி மேலும் மேலும் அதிகரித்துக்கொண்டே சென்றது. உடனே திருவைகுண்டத்தில் உள்ள பெரிய மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றேன். ஆனாலும் இருதயவலி குறைந்தபாடில்லை. ஆதலால் திருநெல்வேலி மருத்துவகல்லூரி மருத்துவமனையில் தீவிர இருதய சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டு, சுமார் 4/5 நாட்களில் பூரண சுகம் பெற்று வீடு திரும்பினேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து எனக்கு பூரண சுகத்தை கொடுத்தார். இக்காலக் கட்டத்தில் என் உடன் பிறந்தவர்கள், கிறிஸ்துவுக்குள்ளான சகோதரர்கள் எனக்கு உதவிகள் செய்தனர். அது எனக்கு போதுமானதாக இருந்தது. இரத்த கொதிப்புக்காக தினமும் மாத்திரைகள் எடுத்துக்கொண்டு வரலானேன். மார்பு நோய்களுக்கு முக்கிய காரணம் மனஉளைச்சல்தான் எனவும், மேலும் இது இரவு நேரங்களில் ஏற்படுகிறது என அறிய வந்தேன். சில மாதங்கள் கடந்தன, மீண்டும் கர்த்தருடைய கிருபையினால் என் குடும்ப, ஊழிய பணிகளை தொடர்ந்தேன்.

5. சுமார் 5 ஆண்டுகள் வாழ்க்கைச்சக்கரம் சுழன்று சென்றன. இதில் முதல் இரண்டு ஆண்டு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அடுத்து 3 ஆண்டுகள் சென்னை வாழ்க்கை. இங்கு அரசு கீழ்பாக்கம் மருத்துவமனையில் மருத்துவ சிகிச்சை பெற்று வரலானேன். சகோ. ரூபன் மாணிக்கராஜ் ஒத்தாசையாக இருந்து வருகிறார். மிக்க நெருக்கடியின் மத்தியில் குடும்ப காரியங்களை (என் குடும்பம் பெரிது. கணவன், மனைவி மற்றும் 5 பிள்ளைகள்) கர்த்தர் எனக்கு கொடுத்த ஊழியத்தை அவருக்கு பிரியமாய் செய்து; சாத்தான் தேவனுடைய சபையை தன்னுடைய ஊழியக்காரர்களை கொண்டு, கள்ள கபடமுள்ள வேலையாட்களை கொண்டு மாறுபாடான, தந்திரமான உபதேசங்களை சபைக்குள் நுழைத்து வருவதைக் கண்டு, அவனையும், அவன் உபதேசங்களையும் சுட்டிக்காட்டி எச்சரித்து, தேவனுடைய சபையை உண்மையான உபதேசங்களை; அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகளின் உபதேசங்களை கொண்டு வழி நடத்தினேன். குடும்பச் செலவுகள், ஊழியத்தின் பாதையில் செலவுகள் நாளுக்கு நாள் என்னை நெருக்கினாலும் எல்லா பாரத்தையும் தாங்க தேவன் எனக்கு பெலன் கொடுத்து, வழி நடத்திக்கொண்டு வந்தார். நல்ல ஆரோக்கியத்தோடு வெளியே காணப்பட்டாலும் உள்ளே மேற்கூறிய நெருக்கங்கள், மற்றும் உணவு, பிரயாணங்கள் போன்ற காரியங்களில் மருத்துவ ஆலோசனை அனுசரிக்கபடாததினாலும் மீண்டும் சரீர ஆரோக்கியமின்மை ஏற்பட்டது. முதல் மாரடைப்புக்கு பின் 5 ஆண்டுகள் கழித்து 11.06.2006 அன்று இரவு 1 மணிக்கு மேல் மீண்டும் எனக்கு மாரடைப்பு ஏற்பட்டது. 10.06.2006 இரவு 11 மணிக்கு மேல்தான் ஒரு வாரம் வெளியூர் சென்று வீடு திரும்பினேன். சாத்தான் தான் மீண்டும் இதைக் கொண்டு வந்தான். இதுவும் சாத்தனுடைய தாக்குதலே. 10.06.2006 அன்று இரவு 1.30 மணி அளவுக்கு நான் வசிக்கும் பூந்தமல்லியில் உள்ள சுந்தர் மருத்துவமனையில் உடனே சிகிச்சைக்கு சேர்க்கப்பட்டேன். சிகிச்சைக்கு பின் அயர்ந்த நித்திரை. ஆனாலும் அதிகாலை 5 மணிக்கு மேல் திடீரென இரத்தவாந்தி. இதற்கு தகுந்த சிகிச்சை கொடுக்க சுந்தர் மருத்துவமனையால் முடியாமையால் சென்னை, போரூர் ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு 7 நாட்கள் சிகிச்சை பெற்றேன். இங்கும் மீண்டும் ஒருமுறை இரத்தவாந்தி. இது குடலில் பெரிய புண் (Ulcer) இருப்பதினால், அதிலிருந்து கசிந்த இரத்தம் என கண்டு பிடிக்கப்பட்டது. குடல்புண்ணுக்கும் சிகிச்சை பெறலானேன். இந்த வனாந்திர யாத்திரையில் நேரத்திற்கு நேரம் சாப்பிட முடியாத நிலை. சாப்பிட இல்லாத நேரம். இந்த ஒழுங்கின்மையினால் குடல்கள் பாதிக்கப்பட்டு இந்த பிரச்சனை உருவானது. இந்த குடல்புண் விஷயத்தில் தன் இளமையில் சகோ. பிரன்காம் என்னைவிட மோசமான நிலையில் 1931–1932–ல் இருந்ததை செய்தி Hearing Recognizing, and acting on the world 7.6.1960 மூலம் அறிய வந்தேன். ஆனாலும் அவர் தெய்வீக சுகம் பெற்றார். இது எனக்கு கொஞ்சம் ஆறுதலைக்கொண்டுவந்தது. எனக்கு இவ்வளவு பெரிய குடல்புண் இருந்ததை எனது அன்றாட வாழ்க்கையில் அறியாதவனாகவே இருந்து வந்தேன். சில ஆண்டுகளுக்கு முன் வயிற்றில் வலி ஏற்பட அது குடல்புண்ணாக இருக்கலாம் என்ற யுகதத்தில் பம்மல் சகோதரி. குளோரி அந்தோனிதாஸ் கூறிய மாத்திரைகளை 4/5 நாட்கள் சாப்பிட்டேன். அத்துடன் வலி நின்றது. அத்துடன் அனைத்தையும் மறந்தேன். அதற்கு பிறகு குடல்புண் குறித்து இப்பொழுது தான் அறியவந்தேன்.

6. ஸ்ரீ ராமசந்திரா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட முதல் நாள் சிறுநீர் வெளியேற கஷ்டப்பட்டிருக்கிறேன். இந்த பிரச்சனை எதினால் வந்தது என்று தெரியவில்லை. இப்படிபட்ட பிரச்சனைகள் எதுவும் முன்பு இல்லை. ஆதலால் அந்த நேரத்தில் சிறுநீர் பையில் ஒரு துளை போட்டு சிறுநீரை வெளியே எடுத்தார்கள். இந்த பிரச்சனை அத்துடன் முடிவு பெற்றது. ஆனாலும் சிகிச்சை நாட்களில் மீண்டும் அந்த பிரச்சனை வந்து நான் கஷ்டப்படக் கூடாது என்பதற்காக ஒரு ட்யூப்பை இணைத்து சிலகாலம் அது செயலற்றதாக இருந்தாலும் இருக்கட்டும் என வைத்து விட்டனர். இதை தான் சாத்தான் மிக மிக மிகைப்படுத்தி எழுதியுள்ளான். அவன் தானே இந்த வியாதிக்கு காரணம். இது தானே அவனுடைய வேலை. தேவனுடைய பிள்ளைகளை வாதிப்பது.

ஆதலால் அது குறித்து நான் கவலைப்படவில்லை. இந்நாட்களில் எனக்கு வயது 62. இந்நிலையில் சரீர பெலவீனங்களை சாத்தான் கொண்டு வருவது சகஜம் தான். இதை எவரும் மறுக்க முடியாது. ஆனாலும் நான் என் வியாதி குறித்து சாத்தானுடைய தாக்குதல்களை ஒரு அறிக்கையாக தேவனுடைய சபைகளுக்கு தெரிவிக்கும் முன்பே, பிசாசு அங்குமிங்கும் ஓடித் திரிந்து, பலரிடம் விசாரித்து, அவர்கள் கூறியதில் கொஞ்சம் கூட்டியும், குறைத்தும், தனக்கு சாதகமாக ஒரு அறிக்கை வெளியிட்டான். அதுவே அவனுடைய சுற்றறிக்கை நாள் 14.07.2006. அந்த சுற்றறிக்கையின் மூலமாக என் உடல் நிலையை, அவனுடைய தாக்குதலை மிகைப்படுத்தி எழுதி என்னை முறியடித்துவிடலாம் என நினைத்தான். ஆனால் அது கூடுமா? கூடாதே!

7. ஸ்ரீ ராமச்சந்திரா மருத்துவமனையிலிருந்த ஏழு நாட்களில் நான்கு நாட்கள் தீவிர இருதய சிகிச்சை பிரிவிலும் மீதி 3 நாட்கள் பொது வார்டிலும் இருந்தேன். மருத்துவ செலவு ரூ. 40,000/–க்கு மேல் ஆகிவிட்டது. இதில் பெரும்பாலான தொகையை எனது குடும்பத்தினர் மூலம் கர்த்தர் சந்தித்தார். தேவனுடைய சபைகள் மூலம் சுமார் ரூ. 3,000/– உதவி. எனக்கும் இதர செலவுகள் ரூ. 15,000/– க்கு மேல் ஆகிவிட்டது. ஆக மொத்தமாக இதுவரை ரூ. 60,000/– க்கு மேல் செலவு. இது எனது சக்திக்கு மிகமிக அதிகமான பாரம் ஆகும். இதனால் உடனே என்னை மருத்துவமனையிலிருந்து டிஸ்சார்ஜ் பண்ணுமாறு கேட்டேன். அவர்கள் எனக்கு இன்னும் பதினைந்து நாளுக்கு மருத்துவனை சிகிச்சை தேவைப்படுகிறது என்றார்கள். நான் என் பொருளாதார நெருக்கடி நிமித்தமாக என்னை உடனே டிஸ்சார்ஜ் செய்யும்படி கேட்டுக்கொண்டேன். 17–ம் தேதி இரவு டிஸ்சார்ஜ் செய்யப்பட்டு வெளியே வந்தேன்.

8. இந்நாட்களில் அரசு, கீழ்பாக்கம் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறேன். சகோ. ரூபன் மாணிக்கராஜ் சிகிச்சைகளுக்கான ஏற்பாடுகளை செய்துக் கொடுத்து உதவியாக இருந்து வருகிறார். எனக்கும் அவருக்கும் அநேக ஆவிக்குரிய காரியங்களில் ஒரு மனப்பாடு இல்லை. ஆனாலும் அது அவர் செய்யும் உதவிகளுக்கு குறுக்கே இல்லை. இந்த பெருந்தன்மை நமது பெரிய புள்ளிகளிடம் இல்லையே என்பதை கண்டு மிக்க மனம் வருந்துகிறேன். இவர்கள் தங்களை பாஸ்டர்கள், தலைவர்கள் என அழைத்துக்கொள்வது ஒரு பெரிய வெட்கக்கேடு. எனது இருதய அறை மற்றும் வால்வுகளில் எந்தவிதமான பிரச்சனை இல்லை. இரத்த ஓட்டத்தில் இரத்த உறைவு காணப்படுவதாக தெரிகிறது. இதனால் இரத்த ஓட்டம் தடைபடுகிறது. இதனால் இருதயவலி ஏற்படுவதாக தெரிகிறது. ஆதலால் இருதய இரத்த ஓட்ட செயல்பாடுகளை முற்றிலுமாக அறிந்துக்கொள்ள ஆன்ஜியோகிராம் பரிசோதனை (Coronary Angiogram) செய்ய வேண்டும் என மருத்துவர்களால் முடிவு செய்யப்பட்டு சென்னை, அரசு பொது மருத்துவமனையில் இதற்கென்று நாள் 15.09.2006 ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த பரிசோதனை செய்ய ஒருமுறை முயற்சித்தேன். பாஸ்டர் ஐசக் வசந்தக்குமார் தனது விசுவாசிகள் மூலம் ஏற்பாடுகள் செய்ய ஆரம்பித்தார். இந்நிலையில் எனக்கு அவருக்கும் லடாய். ஆதலால் உடனே அதை கைவிட்டுவிட்டார். மேலும் அரசு கீழ்பாக்கம் மருத்துவமனையில் விசேஷித்த இரத்த பரிசோதனை செய்ய 22.08.2006 ஒதுக்கப்பட்டுள்ளது. ஆக இந்த மருத்துவ சிகிச்சைகளுக்காக நான் குறைந்தபட்சம் 6 மாதங்கள் வீட்டில் படுக்கையில் இருக்க வேண்டிய நிலையில் உள்ளேன். ஆகார விஷயங்களிலும், பிரயாணகாரியங்களிலும் நிறைய கட்டுப்பாடுகள் உண்டு. இந்த சம்பவங்களை தான் சாத்தான் பெரிதுபடுத்தி ஏதோ விபரீதமான காரியங்கள் எனக்கு நடந்துவிட்டதுபோல் பொய்களையும், புரட்டுகளையும் அவனுடைய சுபாவத்தின்படி எழுதி மக்களை திசை திருப்ப முயற்சிக்கத்தான் அதிலும் அவனுக்கு தோல்வியே. கர்த்தர் அவனுடைய தாக்குதலை முறியடித்தார்.

9. இந்நிலையில் பிசாசு எனக்கு விரோதமாக நடக்காத சம்பவங்களை நடந்ததாக ஜோடித்து போட்ட பொய் வழக்கு கோவை குற்றவியல் நீதிமன்றத்தில் உள்ளதை நீங்கள் அறிவீர்கள். இதுவும் சாத்தானுடைய தாங்குதலே. அதைக் குறித்து சாத்தான் அடிக்கடி பெருமை பாராட்டி எழுதி வருவதையும் நீங்கள் அவனுடைய சுற்றறிக்கையின் மூலமாக அறிவீர்கள். ஏதோ இவனுக்கு மட்டும்தான் பொய் வழக்குகள் போடத் தெரியும், மற்றவர்களுக்கு அந்த அறிவுத் திறமை இல்லை என நினைக்கிறான். நான் இவனை மாதிரி ஈனத்தனத்தில் இறங்கினால் பின் இவனுக்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? நேர்மையான வழியில் கூட நானும் இவன் மீது வழக்கு தொடர முடியும். ஆனாலும் பொறுமையாக இருந்து இவனுடைய ஆழத்தை கணக்கிட்டுக்கொண்டு வருகிறேன். இவன் தொடர்ந்த வழக்கு காரியமாக கோவை நீதிமன்றத்திற்கு 19.05.2006 மற்றும் 08.06.2006 போய் வந்தேன். மீண்டும் 15.06.2006 அன்று போடப்பட்டிருந்தது. நான் சுமார் ஒரு வாரத்திற்கு மேல் வெளியிடங்களுக்குச் சென்றுவிட்டு வரும் வழியில் 8–ம் தேதி கோவை சென்று வழக்கில் ஆஜராகிவிட்டு 10–ம் தேதி இரவு தான் சென்னை வந்து சேர்ந்தேன். இந்நாட்களில் பிரயாணத்தின் பாதையில் அலைச்சல்கள் கொஞ்சம் அதிகம்தான். இந்த அலைச்சலினால் மனஉளைச்சல்களும் உண்டு. ஆனாலும் 11–ம் தேதி பகல் முழுவதும் நன்கு ஒய்வெடுத்து இரவு 10/11 மணிக்கு வழக்கம் போல படுக்கைக்கு சென்றேன். இரவு 1 மணி அளவில் மாரடைப்பு ஏற்பட்டு விட்டது. இது முற்றிலும் ஒரு எதிர்பாராத சம்பவம். ஆனாலும் சாத்தானுடைய தாக்குதலாக இது இருந்தது. எனக்கு சரீர பெலவீனத்தைக் கொண்டு வந்து என்னை அமைதலாக்கிவிடலாம் என நினைத்தான். அதை செய்ய அவனால் ஒருக்காலும் முடியாது. ஏன் என்றால் நான் இயேசு கிறிஸ்துவின் காயத்தினால் சுகம் ஆனேன், சுகம் ஆனேன். இதனால் 15.06.2006 அன்று கோவை நீதிமன்றத்துக்கு செல்ல முடியவில்லை. பொதுவாக கிரிமினல் வழக்குகளில் குற்றம் சாட்டியவன் மற்றும் குற்றம் சாட்டப்பட்டவன் இருவரும் ஒவ்வொரு வாய்தாவிற்கும் சென்று வரவேண்டும். குற்றம் சாட்டப்பட்டவன் தொடர்ந்து ஓரிரு வாய்தாவிற்கு செல்லவில்லை என்றால் அவன்மீது பிடிவாரண்ட் பிறப்பிப்பது நடைமுறை ஆகும். ஆனால் நான் எனது உடல் நலக்குறைவின் நிமித்தம் செல்ல முடியவில்லை. அந்நாட்களில் நீதிமன்ற வழக்கும் என் சிந்தனைகளில் இல்லை.

10. எதிர்பாராத விதமாக 11.07.2006 அன்று மதியம் இரு காவற்காரர்கள் என் இல்லத்திற்கு வந்து என்னை காவல் நிலைய அதிகாரி அழைப்பதாக கூறினார்கள். நான் விபரம் கேட்டதற்கு அவர்கள் விபரத்தை சொல்லவில்லை. அப்பொழுது காவல் நிலையத்திற்கு வரயிலாமைக்கு நான் எனது சரீர பெலவீனத்தைக் கூறி, எனது மருத்துவ சிகிச்சை காரியங்களையும் எடுத்துக் கூறினேன். அவர்கள் சென்று விட்டார்கள். அதன்பின் தான் நான் கோவை நீதிமன்றம் பிறப்பித்த பிடிவாரண்ட் விபரம் அறிய வந்தேன். உடனே அன்று

மாலை காவல் நிலைய அதிகாரிக்கு நான் ஏன் நீதிமன்றத்திற்கு செல்லவில்லை என்பதன் காரணங்களையும், அதை உறுதிப்படுத்த என்னிடமிருந்த அனைத்து மருத்துவ ரிப்போர்ட் நகல்களையும் இணைத்து அனுப்பி 3 மாதங்களில் கோவை நீதிமன்றத்தில் ஆஜராவேன் என்று தெரிவித்தேன். பின் கோவை நீதிமன்றத்திற்கு மனு ஒன்று எழுதி 3 மாத காலஅவகாசம் கேட்டுள்ளேன். இதுதான் இன்றை கோவை நீதிமன்ற வழக்கு விவரம். இதற்கு மிஞ்சி பிசாசானவன் எதுவும் அறிக்கை வெளியிட்டால் அவைகளை நம்பாதீர்கள். அவன் பொய்யன். பொய்களை தூற்றித் திரிவதே அவனுடைய பணி. அவன் வெட்கத்திற்கு மேல் வெட்கம் அடையப்போவது நிச்சயம். அவன் திருந்தமாட்டான். திருந்துவது அவனால் கூடாத காரியம்.

11. நான், இவன் ஊழியக்காரன் என்ற போர்வையின் கீழ் ஆதி முதல் இதுவரை செய்த காமவிகார நடத்தைகளை நான் அறிந்தவரை தேவனுடைய சபைகளுக்கு எழுதி இவனைக் குறித்து எச்சரிக்கையாயிருக்க அறிவுரை கூற நிர்பந்தப்படுத்தப்பட்டேன். அதற்கும் இவனே காரணம். ஏனென்றால் ஓரிடம் விட்டு மறு இடம் சென்று இவன் அதே காரியங்களை தொடர்ந்து செய்துகொண்டு வந்ததே காரியம். ஆனாலும் இவன் ஒரு கள்ள கபடமுள்ள வேலையாள் என்பதை தேவனுடைய சபைகளுக்கு எழுதி அவைகளை எச்சரிக்க வேண்டியது பரிசுத்த ஆவியின் தூண்டுதலாயிருந்தது. தேவசித்தமாகவும் இருந்தது.

12. இவன் தனது சுற்றறிக்கையில் எழுதுவது போன்று நான் மனநிம்மதி இழந்து, சமாதானம் இழந்து, தேவ சந்தோஷம் இழந்து பரிதாபமான நிலையில் இல்லை. மாறாக, ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் இருந்தது போல் இன்றும் கிறிஸ்துவுக்குள் மனரம்மியமாக இருக்கிறேன். சரீரத்தில் சற்று பலவீனம். ஆனாலும் நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஊழியத்தின் பாதையில், கிறிஸ்துவின் நிமித்தம் எனக்கு வரும் பலவீனங்கள், நிந்தைகள், நெருக்கங்கள், துன்பங்கள், இடுக்கண்கள் இவை அனைத்திலும் பிரியப்படுகிறேன். ஏனென்றால் கர்த்தருடைய கிருபை எனக்கு போதும். என்னுடைய பலவீனத்திலே அவர் பலம் பூரணமாய் விளங்குகிறது. படுக்கையில் இருந்து கொண்டே ஊழியத்தை தொடர்ந்து செய்கிறேன். அல்லேலூயா!

13. ஆகவே நான் முழுவதும் முழுகினவனுக்கு இனி ஜான் போனால் என்ன? முழம்போனால் என்ன? என்று நினைக்கிறேன். என்னைக் குறித்தும் என் குடும்பத்தைக் குறித்தும் கொஞ்சம் கூட ஈவு இரக்கமின்றி ஒரு கன்னிப்பெண்ணின் கற்பை சூரையாடுவது போல் கேவலமான, மேசமான காரியங்களை தொடர்ந்து அநேகருக்கு எழுதி அனுப்பி என்னையும், என் குடும்பத்தையும், எங்கள் எதிர்காலத்தையே நாசமாக்கும் அளவிற்கு செய்துவிட்டார் என்று செய்வதை எல்லாம் செய்து விட்டு, அகப்பட்டுக் கொண்டவுடன் மனஅமைதியின்றி புலம்பல் பாடுவது யார்? தன் நடத்தைக்கு வீணாக காலேப் யோசுவா மீது பழியை போட்டு திக்குமுக்காடுவது யார்? இப்படி எழுதுகிறவன் யாராக இருக்க முடியும்? அவனே மனநிம்மதி இழந்து, சமாதானம் இழந்து, தேவசந்தோஷம் இழந்து காணப்படுகிறவனாக இருக்க முடியும். அவன் யார்? அவன் தான் ராஜா! கள்ள கபடமுள்ள வேலையாள், சாத்தான். அவனுக்கு இரட்சிப்பு இல்லை. அவன் நியாயந்தீர்க்கப்பட்டாயிற்று. ஆதலால் தான் இவனை பிசாசு என்று அழைக்கிறேன்.

14. எனக்கு ஏற்பட்ட வியாதியை சாத்தான், நான் அவனுடைய காமவிகார நடத்தைகளை இவன் ஊழிய தொடக்க முதல் இன்று முடிவு வரை வெளியிட்டது யாவும் பொய் ஆகும். ஆதலால் தேவன் எனக்கு இந்த வியாதியை அனுப்பி தண்டனை கொடுத்துள்ளார் என தனது சுற்றறிக்கையில் எழுதி தனக்கடுத்த காரியங்களை குறித்து தேவனுடைய சபையை திசைதிருப்ப முயற்சிக்கிறான். காலேப் யோசுவா எழுதியது போன்று ராஜா ஒன்றும் தவறு செய்யவில்லை. ஆதலால் தான் கர்த்தர் இந்த நாட்களில் வியாதிகளை அனுப்பி காலேப் யோசுவாவை தண்டித்துவிட்டார் என எழுதி தன் தவறுகளை மறைக்க தேவனுடைய சபையை திசைத் திருப்புகிறான். இந்த விஷயத்தில் இவனுக்கு ஆதரவாக வந்துள்ள திரு. சாமுவேல் தங்கமணிக்கும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைய கர்த்தர் ஏற்படுத்திய பாஸ்டர் ஊழியத்திற்கும் என்ன சம்பந்தமோ? ஆக என்னிடத்தில் சம்பந்தமில்லாத இருவர் விமர்சிக்கிறதை நான் ஒரு பொருட்டாக எண்ணாவிட்டாலும், அவர்களுடைய விமர்சனம் தேவனுடைய சபைகளுக்கு இடறலாக இருக்க கூடாது என நினைத்து அதற்கு விளக்கம் எழுத வேண்டிய நிர்பந்தத்துக்குள்ளானேன். ஆனாலும் எனது விளக்கம் உங்கள் ஆத்துமாவுக்கும் பிரயோஜனமாயிருக்கும் என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன்.

15. மனிதனுடைய சரீரத்தில் பலவீனம். அது வியாதி. இதை ஆங்கிலத்தில் Disease என அழைக்கிறோம். Disease என்பது ஒரு கூட்டு சொல் ஆகும். அதாவது இதை இரண்டாக பிரிக்கலாம். Dis மற்றும் Ease என்பது. Dis என்றால் ஒழி (Cease) என பொருள். Ease என்றால் ஆரோக்கியம் (Comfort) என்று பொருள். ஆக Disease என்பதற்கு ஆரோக்கியத்தை ஒழிப்பது, ஆரோக்கியமின்மை என்று பொருள். ஆக வியாதி என்பது நமது சரீரத்தில் ஏற்படும் ஆரோக்கியமின்மை ஆகும். நம்முடைய சரீரத்திற்கு ஏற்படும் ஒரு விதமான அமைதியற்ற நிலையே நோய். நோய் என்றால் துன்பம் என்று பொருள். ஒருவனுக்கு நோய் வந்தால் அத்துடன் வலியும், துன்பமும் தானே வருகிறது. நோய்யின் போது உடல் உறுப்புகள் ஒழுங்காக வேலை செய்யாமல் போவதால் துன்பமும், துயரமும் உண்டாகிறது. தீமையை விளைவிக்க கூடிய கிருமிகளால் மனித உடல் தாக்கப்பட்டு, உடல் நலக் குறைவு. உதாரணமாக காலரா, அம்மை போன்றவைகளாகும். மேலும் நாம் உண்ணும் உணவுடன், உணவுக்குழலில் சுரக்க வேண்டிய சில சுரப்பிகள் (Glands) சரிவர சுரந்து உணவுடன் கலக்காமல் இருந்து வருவதால் ஏற்படும் ஆரோக்கியமின்மையினால் சர்க்கரை வியாதி, மஞ்சள் காமாலை, குடல் வியாதி போன்ற வியாதிகள் ஏற்படுகின்றன. அடுத்து உடற்பாகங்களின் தேய்மானத்தினாலும், இரத்த ஓட்டம் சரியாக இல்லாமல் இருப்பதனாலும், உடற்பாகங்கள் ஒன்றுக்கொன்று உராய்வின்போது உண்டாகும் அசௌகரிகம் மூட்டுவலி, இரத்த அழுத்தம், இடுப்பு வலி போன்ற வலிகளை உண்டாக்குகிறது. நோயுற்ற ஒருவரிடமிருந்து, நல்ல ஆரோக்கியம் உள்ள மற்றொருவருக்கு ஒட்டிக் கொள்ளும் நோயே தொற்று நோய். இது காற்று, உணவு, தண்ணீர், விஷகிருமிகள், உடல் தொடர்பு மூலமாக பரவுகின்றன. உதாரணமாக குஷ்டரோகம், எய்ட்ஸ் போன்றவை.

16. தேவன் மனுஷனை சிருஷ்டித்து, உருவாக்கியபோது அவன் மிகவும் நல்ல ஆரோக்கியமுடையவனாகவே இருந்தான். அவன் முற்றிலும் ஒரு பழுதற்றவனாகவே இருந்தான். ஆதலால் தேவன் சரீர

ஆரோக்கியமின்மையின் அதாவது வியாதிகளின் ஆக்கியோன் அல்ல. ஆதாமினாலே பாவமும், பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது. கர்த்தர் ஆதாமை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பினார் ஆதி:3:23. பூமி அவனிமித்தமாக சபிக்கப்பட்டது. ஆதி:3:17. சாத்தான் இப்பிரபஞ்சத்தின் அதிபதியானான். பூமி தேவகுமாரனுடைய ஆளுகையிலிருந்து சாத்தானுடைய ஆளுகைக்கு மாறியது. இவனால் தான் இப்பூமியில் பசி, பஞ்சம், வறுமை, கொள்ளை, போராட்டம், வியாதி, தீமைகள் அனைத்தும் ஆரம்பமாயிற்று. ஆக சரீர ஆரோக்கியமின்மை, அதின் துவக்கம் பிசாசினிடமிருந்து வருகிறது. என்னுடைய சரீர ஆரோக்கியமின்மை முற்றிலுமாக சாத்தனிடமிருந்து வந்ததே. ஆனால் கர்த்தர் என்னை இரட்சித்தார். அவருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

**17. பிசாசு யார்? பிசாசு ஒரு தீயஆவி. தீயஆவி, பிசாசு எல்லாம் ஒரே வார்த்தையிலிருந்து வருகிறது. ஆங்கிலத்தில் அவன் Tormentor வேதனைக்குட்படுத்துகிறவன், தீங்கிழைக்கும் ஒருவன் என்று அழைக்கப்படுகிறான். தீயஆவி நம்மை தொந்தரவு செய்கின்றன, வேதனைக்குட்படுத்துகின்ற ஒன்றாகும். எனக்கு அன்றும் இன்றும் நேர்ந்ததெல்லாம் இதுதான். அவன் என்னை வேதனைப்படுத்துகிறான். நீங்கள் பரிசுத்த ஆவியை பெற்றிருக்கலாம். ஆனாலும் உங்கள் சரீரம் இன்னும் மீட்கப்படவில்லை. நம்முடைய சரீரம் மீட்கப்படும்வரை ஒரு வேளை நாம் பரிசுத்த ஆவியை பெற்றிருந்தாலும் இந்த சரீர ஆரோக்கியமின்மை வியாதி நம்மை தாக்கதான் செய்யும். நீங்கள் மிக்க அருமையானவனாக, பரிசுத்தவானாக, பரிசுத்த ஆவியை பெற்றவனாக இருந்தாலும் அது ஒரு பொருட்டல்ல. அது உங்கள் ஆத்துமா மட்டுமே. உங்கள் சரீரம் மீட்கப்படும் வரை இந்த வியாதி, நோய், வலிகள் உங்கள் சரீரத்தை தாக்கத்தான் செய்யும். சாத்தான் உங்களை தாக்கத்தான் செய்வான். தொந்தரவு செய்யத்தான் செய்வான். உங்களை வேதனைக்குட்படுத்த செய்யத்தான் செய்வான்.**

18. புற்றுநோய், கட்டி, சதை வளர்ச்சி, காசநோய் மற்ற எல்லா காரியங்களும் இயற்கையான காரியங்கள் அல்ல. அவை இயற்கைக்கு மேம்பட்டவை மற்றும் பிசாசுகள் ஆகும். ஆனால் அது சரீரத்தில் இருக்கின்ற பிசாசுகள் தான், சதை வளர்ச்சிகள், புற்று நோய் போன்றது. அதற்குள் ஜீவன் இருக்கின்றது. அந்த ஜீவனானது பிசாசினுடையதாயிருக்கிறது. கண்சதை வளர்ச்சி, காசநோய் பரவுதல் மற்றும் மற்ற வியாதிகள், அவை பிசாசுகள் ஆகும். அது சரீர பிரகாரமாக இருக்கின்ற ஒன்று. நான் எழுதிய இக்காரியங்கள் பலவற்றைக் குறித்து நீங்கள் **பிசாசியல்** என்ற செய்தியில் தியானிக்கலாம்.

19. நான் எவ்வளவு சுகவீனமடைந்தாலும் பரவாயில்லை. அந்த ஜீவன் என் ஜீவனின்று வேறுபட்ட ஒன்றாகும். நான் தேவனால் உண்டானவன். அது பிசாசினால் உண்டானது. ஆதலால் எனக்கும் அதற்கும் எவ்வித சம்பந்தமும் கிடையாது. சாத்தானுக்கு என்னிடத்தில் ஒன்றுமில்லை. இயேசு கிறிஸ்து என்னை சுகமாக்கினார். அல்லேலுயா ! நீதிமானுக்கு வரும் துன்பங்கள், பாடுகள், நிந்தைகள், துக்கங்கள், துயரங்கள் அநேகமாயிருக்கும். அவை எல்லாவற்றிலுமிருந்து கர்த்தர் அவனை விடுவிக்கிறார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

**20. இந்த சரீர ஆரோக்கியமின்மைக்கு சில காரணங்களை எடுத்துக்காட்டாக உங்களுக்கு கீழே தருகிறேன்.**

1. உன் தேவனாகிய கர்த்தரின் கற்பனைகளுக்கு கீழ்படிந்தால் அது ஆசீர்வாதம். (Blessings) உபா.11:27, 7:12–15. கீழ்படியாவிட்டால் அது சாபம். உபா.11:28. வியாதி கர்த்தருடைய சாபத்தின் ஒரு அம்சம். உபா.28:15, 20–22. இது தேவனுடைய அம்புகள். உபா.32:23–25. இது தேவனுடைய கரத்தின் அடிகள். சங்.39:10.

2. பிறனுடைய யாதொன்றையும் இச்சியாதே. யாத்.20:17. கேயாசி இச்சித்தான். 2இராஜா.5:20. எலியா சபிக்கிறான். கேயாசி குஷ்டரோகியானான். 2இராஜா.5:29.

3. பிறனுடைய மனைவியை இச்சியாதே. யாத்.20:17. தாவீது இச்சித்தான். 2சாமு.11:24. கர்த்தர் அவன் பிள்ளையை அடித்தார். அது வியாதிபட்டு செத்து போயிற்று. 2சாமு.12:15–18.

4. எலிமா செம்மையான வழிகளை புரட்டினான். கர்த்தருடைய கை அவன் மேல் வந்தது. அவன் சில காலம் சூரியனை காணாமல் குருடனானான். அப்.13:10 & 11.

5. பாவத்தினால் திமிர்வாதம். மத்.9:1–7. பாவத்தினால் 38 வருடம் வியாதி. யோ.5:1–15.

6. சாத்தானின் தாக்குதலினால் வியாதி. பிசாசு பிடித்த ஊமையன். மத்.9:32,33. குருடும் ஊமையுமானவன். மத்.12:22. பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட நிமிரக் கூடாத கூனி. லூக்.13:11.

7. விசுவாச பரிட்சை. யோபுவின் ஜீவியம். யோபு கொடிய பருக்களால் வாதிக்கப்பட்டான். யோபு.2:17. கர்த்தர் யோபுவின் முன்னிலைமையைப் பார்க்கிலும் அவன் பின்னிலைமையை ஆசீர்வதித்தார். யோபு.42:12.

8. தேவனுடைய மகிமை விளங்க வியாதி. யோ.11:4

9. தேவனுடைய கிரியைகள் வெளிப்பட வியாதி. யோ.9:3

10. தகுதியற்ற முறையில் கர்த்தருடைய இராப்போஜனபந்தியில் பங்கு பெறுவதனால் வியாதி. 1கொரி.11:26–30.

11. ஊழியக்காரன் தன்னை உயர்த்தாதபடிக்கு வியாதி. உதாரணமாக அப்போஸ்தலனாகிய பவுல் 2கொரி.12:7–9.

12. ஊழியக்காரனுக்கு, அதுவும் தேவனால் அதிகமாக எடுத்து பயன்படுத்தப்பட்ட தீர்க்கதரிசிக்கு வியாதி, அதினால் எலிசா மரணம் அடைந்தான் 2இரா.13:14. 14,20.

13. ஊழியத்தின் பாதையில் மிகுதியான வேலை பளுவின் நிமித்தம் வியாதி. உதா. எப்பாபிரோதீத். பிலி.2:25–30. இவன் தன் பிராணனையும் எண்ணாமல் தேவனுடைய இராஜ்யத்துக்கென ஓயாமல் உழைத்தான். முடிவில் வியாதிப்பட்டான். சாத்தான் வாதித்தான், தாக்கினான். மரணத்திற்கு சமீபமாயிருந்தான். அவ்வண்ணமாகவே காலேப் யோசுவாவும் தன்னுடைய பலவீனங்கள் மத்தியிலும் தேவனுடைய இராஜ்யத்துக்கென்று, இக்காலத்திற்குரிய செய்திக்கென்று, கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்தி விருத்தி அடைவதற்கென்று ஓயாமல் ஒடி உழைத்ததால் வியாதிபட்டான். சாத்தான் அவனை தாக்கினான், வாதித்தான். ஆனால் கர்த்தர் அவனை சுகமாக்கினார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம்.

**21.** இங்கு நான்மேலே குறிப்பிட்ட சம்பவங்களில் அப்போஸ்தலனாகிய பவுல் செய்த தவறு என்ன? யாருக்கு என்ன தீமை விளைவித்தான்? யாருடைய ஊழியத்தை கெடுத்தான்? அவனுக்கு சரீரத்தில் ஒரு முள் கொடுக்கப்பட்டது. எப்பாபிரோதீத்க்கு வியாதி ஏன்? அவன் தேவனுடைய இராஜ்யத்திற்கென்று அயராது உழைத்தான் அல்லவா! எலிசா தீர்க்கதரிசிக்கு வியாதி ஏன்? அவன் ஏன் வியாதியில் இறந்தான்? ஆம், நீதிமான்களுக்கு வரும் துன்பங்கள் அநேகம். கர்த்தர் அவர்களை விடுவிக்கவும் செய்கிறார். மரணத்திற்கு ஒப்புக் கொடுக்கவும் செய்கிறார். அது அவருடைய சுயாதீனம். அதை எதிர்த்து நிற்பவன் யார்? ஒருவனாலும் கூடாது. அதை விமர்சிப்பவன் யார்? பிசாசு. ராஜா யார்? அவன் பிசாசே தான்.

22. நாம் நம்முடைய வாழ்க்கையில் ஒரு பரிபூரணமனிதனுடைய வளர்ச்சியில் வளர்ந்து சென்று கொண்டிருக்கையில் உபத்திரவங்கள், துன்பங்கள், பாடுகள், தொல்லைகள், பிரச்சனைகள், நிந்தைகள் நம்மை அதிகமதிகமாக நெருக்குவதை காண்கிறோம். நாம் பாவிகளாக இருந்த காலத்தில் நம்முடைய அன்றாட வாழ்க்கையில் கூட இத்தனை நெருக்கங்கள் இல்லை. மாறாக கிறிஸ்துவினுடைய திவ்விய சுபாவத்தில் பங்குபெற நாளுக்கு நாள் கடந்து சென்று கொண்டிருக்கையில் நெருக்கங்கள் அதிகமதிகமாக காணப்படுகின்றன. ஆம் கர்த்தரும் நீதிமானுக்கு வரும் துன்பங்கள் அநேகம் என்றே கூறுகிறார். அதோடு மட்டுமல்ல அப்போஸ்தலனாகிய பவுலும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள் என்கிறான். 2தீமோ.3:12. மேலும் பிலிப்பியருக்கு எழுதும்போது கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரம் அல்ல அவர் நிமித்தமாக பாடு படுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது என்கிறான். பிலி.1:29. ஆனால் இவைகள் யாவும் நமது பிரயோஜனத்திற்காகவே, நன்மைக்காகவே அனுமதிக்கப்படுகிறது. முடிவில், அதினின்று விடுதலையும் கொடுக்கிறார். தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார், உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுவதற்கு இடங்கொடாமல், சோதனையை தாங்கத்தக்கதாக, சோதனையோடு கூட அதற்கு தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார். 1கொரி.10:13.

23. ஆனால் சாத்தானோ நமக்கு அவன் கொண்டு வரும் துயரங்களை ஒன்றும் அறியாதது போல் அவைகளை சுட்டிக்காட்டி, இவைகள் ஏன் நடந்தது? எதற்காக நடந்தது? நீ தவறு செய்து விட்டாய். ஆதலால் இது தேவனுடைய தண்டனை, கர்த்தர் உன்னை கைவிட்டு விட்டார். ஆதலால் இவைகள் உங்களுக்கு நேர்ந்தன. என உங்களுக்குள் பலவிதமான சிந்தனைகளை உருவாக்கி நம்மை மனமடையச் செய்கிறான். அவனுடைய தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே! தேவன் நமது உள்ளத்தில் தொடங்கிய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போட சாத்தான் நம்மை தூண்டுகிறான். ஆனால் நாமோ அவனுக்கு இடம் கொடுக்கவே கூடாது. கர்த்தருடைய அனுமதி இல்லாமல் நம்முடைய தலையில் இருந்து தலைமயிர் ஒன்றும் கீழே விழாது. சாத்தானும் நம்முடைய ஜீவனை பறிக்க முடியாது. ஆக கர்த்தர் நமது நன்மைக்காகவே பாடுகளை அனுமதித்து, அதே நேரத்தில் அதினின்று நம்மை விடுவிக்கிறார். அல்லேலூயா!

24. என் வியாதியின் நாட்களில் என்னை நேரில்வந்து பார்த்த, சூழ்நிலைகளினிமித்தம் வந்து பார்க்க முடியாத, பார்க்க விருப்பம் இல்லாத; எனக்காக ஜெபித்த, ஜெபிக்க மறந்த, ஜெபிக்க விருப்பமில்லாத; பண உதவிகள் செய்த, செய்யாத, செய்ய முடியாத நிலையிலிருந்த, செய்ய விருப்பமில்லாத உங்களனைவருக்கும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் என் நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அநேக சபைகளில் எனக்காக விசேஷித்த ஜெபங்கள் ஏறெடுக்கப்பட்டது எனவும் அறிய வந்தேன். உங்களை சத்தியத்தின் பாதையில் வழி நடத்த கடமைப்பட்டிருக்கிறேன். விசேஷமாக எனது இல்லத்திற்கு வந்து ஸ்தோத்திர ஜெபக்கூட்டம் நடத்திச் சென்ற சகோ. அந்தோணி ஜோசப், சகோ. தாமஸ் ஜெயசீலன், சகோ. மணிமாறன் குடும்பத்தினருக்கும் எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். நான் உங்கள் அனைவருக்கும் என்றும் கடமைப்பட்டிருக்கிறேன்.

25. எனது மருத்துவ சிகிச்சைகளின் மத்தியிலும், இந்நாட்களில் நான் எனது வீட்டிலிருந்தாலும், வீட்டிலிருந்தே அநேக ஆவிக்குரிய காரியங்களை அவ்வப்போது எழுதி வருவேன். நான் என்னுடைய ஊழிய ஸ்தானத்தை, கடமைகளை, பொறுப்புகளை அறிந்தவனாய் அதை காத்துக்கொண்டு வருகிறேன். இதில் நான் யாரிடமும் ஒப்புரவாக முடியாது. நான் என் ஊழியத்தின் பாதையில் எங்கு நிற்கிறேன் என்று அறிந்திருக்கிறேன். நான் ஆவியில் நடந்து, தேவசித்தத்தை செய்து வருகிறேன் என்பதை நன்கு அறிவேன். என்னுடைய ஊழியம் மிகவும் கடினமானது. அது செம்மறி ஆடுகளுக்கு மட்டுமே. வெள்ளாடுகளுக்கு எனது ஊழியம் பிரயோஜனப்படாது.

26. சாத்தான் என்னை தாக்க கொண்டு வந்த இந்த வியாதி பிரச்சனைகள் என் ஊழியத்தை எந்த வகையிலும் பாதிக்காது என கிறிஸ்துவுக்குள் நம்புகிறேன். படுக்கையின் மேல் வியாதியாய் கிடந்த என்னை தாங்கி, என் முதிர்ந்த வயதில் என்னை தள்ளிவிடாமலும், என் பெலன் நடுங்கும் போதும் என்னை கைவிடாமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். என் தேவன், நான் இக்காலத்திற்குரிய செய்தியிலுள்ள மக்களை சத்தியத்திற்குள் வழிநடத்த செய்து வந்த எல்லாவற்றின்படியும் எனக்கு நன்மை உண்டாக என்னை நினைத்தருளினார். அல்லேலூயா! கர்த்தாவே இந்த வனாந்திர யாத்திரையில், அவைகள் எதுவாக இருந்தாலும், அது எனக்காக வைக்கப்பட்டிருக்குமானால் அவைகளினூடே நான் கடந்து செல்ல, சத்துருவை எதிர்த்து நிற்க, அவனை மேற்கொள்ள பெலன் தாரும். கிருபை தாரும். அது எனக்கு போதுமானதாகும். ஆமென்.

27. நான் படுக்கையில் இருந்த போதிலும் இந்த செய்தித் தொகுப்பை நான் சொல்லச் சொல்ல எனக்கு எழுதிக் கொடுத்த (சுமார் 46 பக்கங்கள்) அதன்பின் அனைத்து பணிகளையும் கவனித்து, இந்த செய்தித் தொகுப்பு உங்கள் கரங்களில் வந்து சேரும் வரை உழைத்த என் மூத்த மகள் இவாஞ்சலின் தெபொராளுக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் எனது நன்றி. அவளுக்காகவும், அவள் தனது மருத்துவக் கல்லூரி படிப்பை வருகிற ஆண்டு பிப்ரவரி மாதத்தில் (2007) வெற்றிகரமாக முடித்து வெளியேறவும் அவளை உங்கள் ஜெபங்களில் நினைத்துக்கொள்ளுங்கள். அவளும் ஏற்ற வேளையில் தனது கல்லூரி படிப்பை முடிக்கவிடாதபடி சாத்தான் தாக்கி வருகிறான். உங்கள் ஜெபமே, எங்களது ஜெயம்.



**சகோ. காலேப் யோசுவா**